வீராதிவீரன் கதை

154

417
ALL-TAMIL
00359 / 154

O-, 8, V
N67
112438

வீணாதிவீணன் கதை

(மறந்துபோன கிராமீய கதைப் பாடல்)

பதிப்பாசிரியர்:

நா. வானமாமலை, எம்.ஏ., எல்.டி.

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிட்.,
6/30, மவுண்ட் ரோடு,
சென்னை-2

முதற் பதிப்பு :   ஜனவரி, 1967

உரிமைப் பதிவு

விலை ரூ.   2.50

112438

அச்சிட்டவர் :

ரங்கா பிரிண்டர்ஸ்,

சென்னை-14.

பொருளடக்கம்

	பக்கம்
முன்னுரை	1
ஆராய்ச்சியுரை	26
வீரணுதிவீணன் வில்லுப்பாட்டு	57
பிற்சேர்க்கை	100

முன்னுரை

(நா. வானமாமலை)

25 ஆண்டுகளுக்கு முன்னர் ஒருநாள். திரு. ராஜாஜி அவர்கள் சென்னை முதன் மந்திரியாக இருந்தார். மதுவிலக்குச் சட்டம் அமுலாவதால் ஏற்படும் நஷ்டத்தை ஈடுகட்ட அவர் வர்த்தகவரி விதித்தார். உபயோகப் பொருள்களின் விற்பனையில் ரூபாய்க்கு இரண்டு பைசா வரி விதிக்கப்பட்டது.

இது குறித்து ஒரு பெரியவர் என்னிடம் பேச்சுக் கொடுத்தார்.

“இந்த வரி வீணாதிவீணன் குடக்காசு வசூலித்தது போல அல்லவா இருக்கிறது?”

“குடக்காசு என்ருல் என்ன? வீணாதிவீணன் யார்?” என்று நான் கேட்டேன்.

“வீணாதிவீணன் ஒரு கொள்ளைக்காரன். குலசேகர பாண்டியர் வள்ளியூர் கோட்டையை ஆண்டு வந்த

காலம் அப் பகுதியில் வீணுதிவீணன் ஒரு கொள்ளைக் கூட்டத்தைச் சேர்த்துக் கொண்டு மக்கள்மீது அரசன் பெயரால் வரிவிதிக்கத் தொடங்கினுன். பெண்கள் கிணற்றிலிருந்தும், ஊருணியிலிருந்தும் முகக்கும் ஒவ்வொரு குடம் தண்ணீருக்கும் அவன் ஒரு காசு வரி விதித்தான். கொடுக்காதவர்களின் குடங்களைத் தடியால் உடைத்தான். அவன்தான் வீணுதிவீணன். அவன் குடத்துக்கு வரி விதித்ததுதான் குடக்காசு" என்ருர் பெரியவர்.

வீணுதிவீணன் எப்படிக் கொள்ளைக்காரன் ஆனுன்? கொள்ளைக்காரனுல் ராஜ்ய ஆதிக்கத்தையும் மீறி எப்படி வரிவசூலிக்க முடிந்தது? அவன் முடிவு என்ன வாயிற்று? இக்கதையின் சரித்திர காலம் என்ன ?

இக்கேள்விகளுக்கெல்லாம் அப்பெரியவரால் விடை கூற முடியவில்லை.

எனது நண்பர் நல்லகண்ணு கிராமீயக் கதைகளைச் சேகரிப்பதில் பேரார்வம் உடையவர். அவர் வள்ளியூர் பகுதிக்கு அடிக்கடி சென்று வருவார். அவரிடம் இக் கதை பற்றிக் குறிப்பிட்டேன். அவர் தமக்கும் இக் கதை தெரியுமென்றும், ஆனுல் நான் கேட்ட கேள்விகளுக்கு விடையளிப்பதற்கு விவரங்கள் சேகரிக்க வேண்டுமென்றும் கூறினுர்.

இம்மாதிரிக் கதைகள் நாட்டுப்பாடல் புலவர்களான கணியார்களுக்கும், வில்லுப் பாட்டுக்காரர்களுக்கும் தெரிந்திருக்கக்கூடும் என்றெண்ணி நான் பல கணியான்களைக் கேட்டேன். அவர்கள் இக்கதை பற்றிக் கேள்விப்பட்டதில்லை என்று சொன்னுர்கள். வில்லுப்

பாட்டுக்காரர்களில் பலர் குடக்காசு வசூலித்த கதையை தமது வில்லுப்பாட்டுக்களில் உபகதையாகச் சொல்லி வருவதாகச் சொன்னார்கள்.

1957ல் நான் முத்துப்பட்டன் கதை பற்றிய சரித்திர உண்மைகளை ஆராய்ந்து வந்தேன். அப்பொழுது கல்லிடைக்குறிச்சியில் வாழ்ந்து வந்த முத்துப்புலவர் என்ற வில்லுப்பாட்டுப் புலவரைச் சந்தித்து இக்கதை விஷயமாகப் பேசிக்கொண்டிருந்தேன். அவர் முத்துப்பட்டன் கதை சம்பந்தமான பல அபூர்வமான தகவல்களை எனக்குச் சொன்னார். அது முடிந்ததும் வீணாதிவீணன் கதையைப் பற்றிக் கேட்டேன். அவர் அக்கதையை வில்லுப்பாட்டாகப் பாடும் வழக்கம் நின்றுவிட்டதென்றும், வள்ளியூர், பணகுடிப் பகுதிகளில் இககதையைப் பற்றி விசாரிக்கலாமென்று சொன்னார். அதோடு சிங்கம்பட்டியில் வாழ்ந்துவந்த ஒரு முதியவரிடம் கேட்டால் ஒருவேளை இக்கதையின் விவரங்களை அறியலாம் என்றும் சொன்னார். அவர் பெயர் சிவசுப்பிரமணியத் தேவர். வயது 94.

அவர் நாட்டுக்கதைப் பாடல்கள் பலவற்றை அறிந்திருந்தார். வீணாதிவீணன் கதைக்கும் ஐவர் ராசாக்கள் கதைக்கும் தொடர்பு உண்டு என்று அவர் கூறினார். ஐவர் ராசாக்கள் கதை என்னவென்றே எனக்கு அப்பொழுது தெரியாது. அவர் ஐவர் ராசாக்கள் கதை, பஞ்சபாண்டியர் கதை, கன்னடியன் படைப்போர், உலகமுழுதுடையாள் கதை, வெட்டும் பெருமாள் கதை என்ற ஐந்து கதைப் பாடல்களும் ஒரே வரலாற்றைச் சொல்லுவன என்று தெரிவித்தார்.

இக்கதைகளின் சுருக்கத்தையும் கீழ்வருமாறு தெரிவித்தார்.

தென் தமிழ்நாட்டில் பாண்டியகுலச் சோதரர்கள் ஐவர் ஐந்து கோட்டைகள் கட்டி ஆட்சிசெய்து வந்தார்கள். அவர்களுள் மூத்தவன் குலசேகரன். இவன் கழைக்கூத்தி ஒருத்தியைக் காதலித்து மணந்து கொண்டான். அவளுக்கு உலக முழுதுடையாள் என்ற அரச பட்டமும் வழங்கினான். சில நாட்களுக்குப்பின் வெங்கல ராசன் என்ற கன்னடிய மன்னன் ஐந்து கோட்டைகளையும் கைப்பற்றப் படையெடுத்தான். ஐந்து சகோதரர்களும் படைதிரட்டி அவனை விரட்டினார்கள். கன்னடியன் தோற்றோடிய பின் குலசேகரன் கோட்டைப் பாதுகாப்பை காளிங்கன் என்ற தளபதியிடம் ஒப்படைத்து விட்டு மதுரைக்குச் சென்றுவிட்டான். படையெடுப்பு அபாயம் மறைந்ததும், வள்ளியூர் ராஜ்ய நிருவாகத்தில ஊழல்கள் மலிந்தன. லஞ்சமும், அநியாயமும் தலை தூக்கின. இக்காலத்தில் தான் வீணாதிவீணன் கலகம் தோன்றியது. அவன் குலசேகரன் ஆணையென்று பறைசாற்றி குடக்காசும், கலியாண வரியும், சாவு வரியும் வசூலித்தான். இதையறிந்த குலசேகரன் நாடு திரும்பினான். இதற்குள் வீணாதிவீணன் கோட்டையெழுப்பி போட்டியாட்சி நடத்தத் துவங்கினான். குலசேகரன் தனது தம்பிமாரை வரவழைத்து அவன்மீது படையெடுத்தான். வீணாதிவீணன் கைதியானான். தன்னுடைய செல்வம் முழுவதையும் ஒப்படைத்தான். தன் கதை முழுவதையும் சொன்னான். நியாயமான வழியில் வாழ வகையற்றுப் போனதால் கொள்ளையடித்து அதில் காவலருக்கும், ராணுவத்திற்கும், அதிகாரிகளுக்கும் பங்கு கொடுத்து தானும் பெருஞ் செல்வம் சேகரித்த தாகச் சொன்னான். இந்நிலைமை அரசனுக்கு விளங்கவே பகிரங்கமாகக் கோட்டை கட்டியதாகவும் கூறினான். அரசன் கொடுத்த தண்டனைக்கு உட்படுவ

தாகக் கூறி வணங்கினுன். அரசன் அவனை இளைய மந்திரியாக்கிக் கொண்டான். பின்னர் நடந்த கன்னடியன் போரில் வீரைதிவீரன் குலசேகரனுக்காக போராடி உயிர் துறந்தான்.

இரண்டாவது கன்னடியன் போர் திருமண மறுப்பால் தொடங்கியது. கன்னடியன் தன் மகளைக் குலசேகரனுக்கு மணம்பேசித் தூதனுப்பினுன். குலசேகரன் மறுக்கவே போர் தொடங்கிற்று. வள்ளியூர் கோட்டை அழிந்தது. குலசேகரனைத் தவிர, அரசகுலத்தினர் அனைவரும் போரில் மாண்டனர். குலசேகரன் சிறைப் பட்டான். அவனை பல்லக்கில் தூக்கிச் சென்று தன் மகளுக்கு மணம் செய்விக்கக் கன்னடியன் முயன்ருன். ஆனுல் குலசேகரன் பல்லக்கிலேயே வைரம் தின்று உயிர்விட்டான். கன்னடிய இளவரசி இதையறிந்து உயிர்நீத்த குலசேகரனுக்கே மாலையிட்டு உடன்கட்டையேறினுள்.

இக் கதையை சிவசுப்பிரமணியப் புலவர் சொல்லக் கேட்டு நான் அக்கதைப் பாடல் பிரதி கிடைக்குமா என்று தேட ஆரம்பித்தேன். பல நண்பர்களிடம் சொல்லி வைத்தேன். வில்லுப்பாடல் புலவர்களை விசாரிக்கச் சொன்னேன். தஞ்சை சரஸ்வதிமகால் நூல் நிலையத்தில் தேடினேன். பலவாண்டுகளாகத் தேடியும் இக்கதைப் பாடல் பிரதியெதுவும் கிடைக்கவில்லை.

ஆனுல் சாதி வரலாறுகள் பற்றிய சில நூல்களில் இக்கதையைப் பற்றிய குறிப்புகள் கிடைத்தன. ''மறவர் வரலாறு'' என்ற நூலில் பஞ்சபாண்டியர் கதைச் சுருக்கத்தைப் படித்தேன். அப்பெயருடைய வில்லுப்பாட்டு இருப்பதாக ஆசிரியர் குறிப்பிட்டிருந்தார். ''நாடார் மன்னரும், நாயக்க மன்னரும்'' என்ற

நூலில் 'ஐவர் ராசாக்கள் கதை'' என்ற கதையின் சுருக்கத்தைக் கண்டேன். 'சண்பகராமன் பள்ளு' என்ற நூலின் முகவுரையில் ''கன்னடியன் படைப்போர்'' என்ற கதைப்பாடலின் சுருக்கத்தையும், அப்புத்தகத்தின் அட்டையில் ''கன்னடியன் படைப்போர்'' என்ற புத்தக விளம்பரத்தையும் பார்த்தேன். விளம்பரத்தில் ''வில்லுப்பாட்டின் கதையை வசனத்தில் எழுதியது'' என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த நூல் அச்சான அச்சகத்திற்கு எழுதினேன். விலாசத்தில் அச்சகம் இல்லை என்று கடிதம் திரும்பிவிட்டது. நாகர்கோவிலில், அச்சக விலாசமிருந்ததால் அந்நகரிலுள்ள நண்பர்களுக்கு எழுதினேன். அந்த விலாசத்தில் 20 வருஷங்களுக்கு மேலாகவே ஒரு ஜவுளிக்கடை இருப்பதாகவும், அதற்குமுன் ஒரு வேளை அங்கே அச்சகம் இருந்திருக்கலாமென்றும் நண்பர்கள் தெரிவித்தார்கள்.

இச்சமயத்தில் என் நண்பர் நல்லகண்ணு 'ஐவர் ராசாக்கள் கதை' என்று முகப்பு ஏட்டில் வரையப்பட்ட ஏட்டுப் பிரதியொன்றை மிகவும் சிரமமெடுத்துக் கொண்டு யாரிடமோ வாங்கி வந்தார்கள். பழைய காலத்து ஏடு. சிற்சில இடங்களில் கரையானும், பூச்சிகளும் அரித்த துவாரங்கள். முழுதும் இரண்டு நாளில் படித்து முடித்தேன்.

நான் பல வருஷங்களாகத் தேடிக் • கொண்டிருந்த கதைப் பாடலின் முதல் பகுதி இது. சுமார் 80 ஏடுகளில் குலசேகரப் பாண்டியன் பிறப்பு வளர்ப்பு மட்டும் வில்லுப்பாட்டு வடிவத்தில் வரையப்பட்டிருந்தது. கதையாரம்பம் மட்டும் தான் அது. சில நாட்களுக்குப் பிறகு ஒரு நண்பர் 'மாலையம்மை கதை'

என்றேர் கதையை எனக்கு அனுப்பி வைத்தார். மாலையம்மை குலசேகரனின் தாயார். அவள் ஐந்து குழந்தைகள் பெற்ற கதையைத்தான் இப்பாடலும் சொல்லுகிறது.

கன்னடியன் சண்டையைப் பற்றியும், வீணுதி வீணன் கலகத்தைப் பற்றியும் அறிந்து கொள்ள முடியாதபடி பல ஏட்டுப் பிரதிகளும் அழிந்து விட்டனவோ என்று நான் வருந்தினேன். நாட்டுக் கதைப் பாடல்கள் காலத்தால் முந்தியதும் பெரியதும், வரலாற்றுச் சம்பவங்கள் பற்றியும், சமூக வாழ்க்கை பற்றியும் நாம் அறியாத புதிய விவரங்கள் அளிப்பதுமான இக்கதை கிடைக்காமலே போய் விடுமோ என்று எண்ணினேன்.

ஒருநாள் தற்செயலாக எனது தமிழாசிரியரும் இலக்கிய ரசிகருமான திரு அருணுசலக் கவுண்டர் அவர்களைக் கண்டு பேசிக் கொண்டிருந்தேன். எனக்குத் தனி நாட்டுப் பாடல்களில் ஆர்வம் உண்டென்பதும், இரண்டு தொகுப்புகள் நான் வெளியிட்டிருந்ததும் அவர்களுக்குத் தெரியும்.

"நீ நீண்ட கதைப் பாடல்களை வெளியிட எண்ணியிருக்கிருயா? என்னிடம் ஐவர் ராசாக்கள் கதையொன்று இருக்கிறது. கதை முழுவதும் இருக்கிறது. எழுதிய தாள் மிகப் பழமையானது. கைபட்டாலே நொறுங்கி விடும். நீ வெளியிடுவாயாஞலோ, அல்லது ஆராய எண்ணிஞலோ உனக்கு அதனைக் கொடுத்து விடுகிறேன்" என்ருர்கள்.

எனக்குப் பேசவே ஓடவில்லை.

"எத்தனை வருஷங்களாக இது உங்களிடம் இருக்கிறது?" என்று கேட்டேன்.

"பத்து வருஷமாக" என்ருர்கள்.

நான் பத்து வருஷமாக இக்கதையைத் தேடியலேந்து அலுத்துப் போன விவரங்களையெல்லாம் கூறினேன்.

"என்னிடம் கேட்டிருக்கக் கூடாதா?" என்ருர்கள்.

"உங்களுக்கு இத்துறையில் ஆர்வமுண்டு என்று எனக்கு எப்படித் தெரியும்? இலக்கிய வரலாற்றிலும், இலக்கிய ரசனையிலும், தமிழர் வரலாற்றிலும் உங்களுக்கு ஆர்வமுண்டு என்பது எனக்குத் தெரியும். நான் தேடிக்கொண்டிருக்கும் கதை உங்களிடம் இருக்குமென்று நான் எப்படி எதிர்பார்க்க முடியும்?" என்றேன்.

கதைப்பாடல் எழுதிய நோட்டுப் புத்தகங்களை அனுப்பி வைத்தார்கள்.

அது 1828ல் எழுதப்பட்டது. ஆனல் பாடல் எழுதப்பட்டது அதற்கு சில நூற்ருண்டுகளுக்கு முன்னல். இப்பிரதி ஏட்டுப் பிரதியிலிருந்து பெயர்த்தெழுதப்பட்டது.

முழுதும் படித்துப் பார்த்தேன். முழுக்கதையும் இருந்தது. சிற்சில இடங்களில் துளைகள் இருந்தன. ஆயினும் முழுவதும் வாசித்து விட முடிந்தது.

இக் கதையின் ஒரு கிளைக்கதையாய் வீணாதி வீணன் கதை காணப்பட்டது. ஐவர் ராசாக்கள் கதையும், வீணாதி வீணன் கதையும் நாட்டுப்பாடல் இலக்கியத் துறையில் மிகச் சிறந்த படைப்புக்கள்.

வீஞ்ஞுதிவீணன் கதை ஒரு அரசியல் நையாண்டிக் கதை. சமூகத்தின் குறைபாட்டைச் சுட்டிக்காட்டி அதைத் திருத்துவதற்கு ஒரு மறைமுகமான பலாத்கார வழியைக் கதாநாயகன் கையாளுகிறுன். நியாயத் துக்கு வழியில்லாத போது கொள்ளைக்காரன் ஆட்சி செலுத்துகிறுன். ஆட்சியும், கொள்ளைக்காரன் கொடுமையும் சமமாகி விடுகிறது. அப்பொழுது ஆட்சிக்குக் கண் திறக்கிறது. கதாநாயகன் கொள்ளைக்காரனல்ல; நீதி போதகன் என்பதை ஆட்சி உணர்ந்து திருந்து கிறது.

இன்றும் நமக்கு இச்சமூக நீதி தேவையே. வர லாற்றுச் சூழலில், சமூக நீதி போதிக்கும் இக்கதையின் சுருக்கத்தை இப்பொழுது காண்போம்.

வீஞ்ஞுதிவீணன் கதை

ஐவர் ராசாக்கள் கதை நடுவே இது ஒரு கிளைக்கதை. கன்னடியன் படையெடுப்பின்போது தென்தமிழ் நாட்டு மக்களெல்லோரும் பஞ்ச பாண்டியரைப் பின்பற்றி ஒன்றுபட்டு எதிரியை விரட்டிஞர்கள். அப்பொழுது வீரமும், தியாகமும், பரஸ்பர உதவியும் மக்களின் பொதுவான குணங்களாகப் பரவியிருந்தன. போர் நின்றது. கோட்டைகளில் அமைதி நிலவிற்று. அரசன் வள்ளியூர் கோட்டையை விட்டு மதுரை சென்றுவிட் டான். காளிங்கன் அதிகாரி கோட்டைத் தளபதியா யிருந்தான். இப்பொழுது மக்களிடையே சுயநலமும், கோழைத்தனமும், வன்கண்மையும் குடிபுகுந்தன.

இந்த சந்தர்ப்பத்தில்தான் வீரூதிவீனன் கதை தொடங்குகிறது.

காஞ்சில் நாட்டில் மேலவெம்பனூரில் கங்கைகுல வேளாளர் குலத்தில் ஒரு மைந்தன் பிறந்தான். அவனது தாய் தந்தையர் இளமையிலேயே காலமாயினர். அவனது உறவினர்கள் அவனை மோசம் செய்து சொத்து சுகங்களைக் கைப்பற்றிக் கொண்டனர். எட்டு நாள் வீடடைத்து பட்டினியாய்க் கிடந்தான். ஏனென்று கேட்பாரில்லை. எனவே இவ்வூரிலிருந்தால் இறந்து போவோமென்றெண்ணி இரவிலேயே வீட்டை விட்டுக் கிளம்பினான்.

வழியில் வண்ணான் முருக்கன் வீட்டைக் கண்டான். உடனே அவனிடம் போய்,

"தம்பிரானே யொன்றுமில்லை தட்டழிந்து போனேன்,
சாதிக்கிழிவாக என்னைச் சோதிச்சுதே தெய்வம்,
பந்தி நீக்குவார்களென்று கந்தை தூக்க வந்தேன்,
பத்திரமாய் காதிலொரு முத்திரை போடென்றான்."

வண்ணானிடம் "அழுக்கு மூட்டை தூக்குகிறேன். சாதிச் சின்னமாகக் காதில் ஒரு முத்திரை போடு" என்று சொன்னான்.

அதற்கவன் "ஐயையோ, நீ நாட்டுக்கொரு வீட்டுக்காரன். உயர்ந்த சாதியில் பிறந்தவன், உனக்கும் இந்தத் தொழிலுக்கும் ஆகாதப்பா!" என்று சொல்லி அனுப்பிவிட்டான்.

"இட்டமாக ஆண்டவீடு மொட்டையாகப் போச்சு,
எந்தனுட காலவினை இந்தப்படியாச்சு"

என்று பாடிக்கொண்டே அவன் வள்ளியூர்க் கோட்டையை நோக்கி நடந்தான்.

வாசல்காவலர் கூட்டத்தைக் கடந்து வன்னியர் வீதிக்கு வந்தான். ''யாதாவே, பிச்சையிடம்மா'' என்று கத்தினான். தெரு நாய் குரைத்தது. சிறுவர்கள் கோல் கொண்டு குத்தினார்கள். இரண்டு வீட்டில் வாங்கிக் குடித்ததும் அவனுக்கு வாந்தி வந்தது. ஒரு திண்ணையில் போய்ச் சாய்ந்தவன் திறந்த கதவின் வழியாகப் பார்த்த போது ஆடவன் ஒருவன் 'குத்து, கொல்லு, வெட்டு' என்று கத்தியபடி ஓடிவந்தான். வேம்பனூரான் ஓடி ஒளிந்தான்.

இரவில் நெடுநேரம் உறங்காமல் சிந்தித்தான். பண்டார வேஷம் போட்டால் சோற்றுக்குத் தட்டு ஏற்படாது என்று எண்ணி, எரித்த முட்டையில் கிடந்த சாம்பலை அள்ளிப் பூசிக்கொண்டான். தலைமயிரை உச்சியில் சேர்த்துக் கட்டிக்கொண்டான். தெருவில் சென்று ''அரகரா, தெய்வம் குருதர்மப் பிச்சையிடம்மா'' என்று கூவினான். ஒரு விதவை அவனை அழைத்துச் சென்று உற்று நோக்கினாள். அவன் வேடதாரி என்பதையறிந்துகொண்டு கயிறும், துடைப்பக்கட்டையும் தூக்கிக்கொண்டு அவனை அடிக்க வந்தாள். அவன் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு ஓடினான். ஊருக்கு வெளியே ஒரு மண்டபத்திற்குச் சென்று துணியை விரித்துப் படுத்துக் கொண்டான். காலையில் எழுந்து காய்கறி வியாபாரம் செய்யலாமென்று முடிவு செய்து கொண்டான்.

கோட்டைக்கு வெளியே சென்று காட்டில் காய்த்துக் கிடக்கும், சுண்டைக்காயையும் காட்டு முருங்கைக்

காயையும் பறித்துத் துணியில் கட்டித் தலையில் வைத்துக்கொண்டு கோட்டை வாசலுக்கு வந்தான். கோட்டைக் காவலர்கள் ஆளுக்கொரு பிடி காய் பறித்துக் கொண்டார்கள். தலைச்சுமை காலியாகிவிட்டது. மறுபடி காட்டுக்குச் சென்று தூவிளங்காய் பறித்து மடியில் கட்டிக் கொணர்ந்தான். அப்பொழுது காடு காவல் செய்யும் பூவண்டன்மார் அவனை மறித்துச் ''சீட்டெங்கே? முத்திரையெங்கே?'' என்று கேட்டார்கள். அவனுக்கு காட்டுச் சட்டமெல்லாம் தெரியாது. காடுகாவலர் அவனை அடித்து, காயில் ஒரு கூறு பிடுங்கிக் கொண்டு விரட்டிவிட்டனர். மீதமிருந்த காயைக் கோட்டை வாசலுக்குக் கொண்டு வந்தான். கோட்டை காவலருக்குச் சமையல் செய்யும் பெண்கள் காயை வாங்கிக்கொண்டு காசு பின்னர் தருவதாகச் சொல்லி விரட்டி விட்டனர். முதலில்லா வியாபாரம் இப்படி முடிந்தது.

மறுநாள் விறகு வெட்டிக்கொண்டு வந்து விற்கலாம் என்றெண்ணிக் காட்டிற்குப் போனான். விறகு வெட்டி தலைச்சுமையாகக் கொண்டு வரும்போது, மலைக் குத்தகைக்காரர்கள் மடக்கிக்கொண்டு பங்குகேட்டார்கள். குலசேகரன் கோட்டைக்குப் போகிற விறகென்று அவன் சொல்லிப் பார்த்தான். கேட்காமல் நாலைந்து அறை அறைந்து, ஒரு பகுதி விறகைப் பிடுங்கிக் கொண்டு விரட்டி விட்டனர்.

எஞ்சிய விறகை வீதியில் கொண்டு சென்றான். ஒரு விதவை விறகு வாங்குவதாக கூறி அவனை அழைத்தாள். விறகுக்கட்டைப் போட்டுவிட்டுக் கூலி கேட்டவுடனே அவள் ''திருடன் திருடன்''என்று கத்தினாள்.

அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்களெல்லாம் ஓடி வந்தார்கள். அவன் அடி உதைக்குப் பயந்து ஓடிவிட்டான்.

தனியே போயிருந்து யோசனை செய்தான். இதற்கென்ன செய்யலாம்? அம்பலகாரரிடம் முறையிடலாமா? அவர்களெல்லாம் தந்திரப் பேச்சைக் கேட்பார்களே அல்லாமல் உண்மைக்குச் செவிசாய்க்க மாட்டார்கள். மேனிமினுக்காக இருந்தால்தான் ஒருவன் சொல் அம்பலமேறும். ஏழை சொல் அம்பலமேறுமா? அரண்மனையில் நியாயம் கிடையாது.

இவ்வாறு நினைத்துக்கொண்டே தலைசாய்க்க ஓரிடம் தேடினான். ஓர் இலை வாணிச்சி வீட்டுத் திண்ணையில் படுத்துக்கொண்டு உடல் வலியால் முனகினான். இலை வாணிச்சி சப்தம் கேட்டு வெளியே வந்தாள்.

''நோக்காட்டுக்காரன் யார்?'' என்றாள். அவன் சொல்லுவான்.

''காடு தேடி விறகு சுமந்திட்டேன்,
காசு காணாத பாவியாய்ப் போயினேன்
மாடு பூட்டி உழுகின்ற பேர் மத்த
வைக்கோல் போட மறுத்துக் காவலன்
பட்டினியாய் பத்துக் காசும் தொட்டு
பத்தெட்டு நாளாய்க் கொல்லுதம்மா.''

அவள் பெற்ற தாய்போல் மனமிரங்கி உண்ண உணவளித்தாள். காலையில் விறகு வெட்டுவதற்கு ஒரு அரிவாள் கொடுத்து அனுப்பிவைத்தாள். அவன் மனத்திற்கு அவளை வாழ்த்தினான். ஒவ்வொரு நாளும் அவன் இரண்டு மூன்று விறகுக் கட்டுகளைக் கொண்டு வந்து போட்டான். அவள் வயிறு நிறையச் சோறு போட்டாள்

சில நாட்களுக்குப்பின் அவனது வாழ்க்கை வரலா றனைத்தையுங் கேட்டறிந்தாள். உடுக்க உடையும், காதுக்கு கடுக்கனும், காலுக்குச் செருப்பும் அளித்தாள். இப்புதிய கோலத்தில் அவன் சீமானைப் போலிருந்தான். வள்ளியூரில் அவனை விரட்டியடித்த பெண்கள் தெருவில் நின்று ஓரக்கண்ணால் பார்த்தனர்.

பணத்தின் மதிப்பை அவன் அனுபவத்தால் கண்டு கொண்டான். அவன் மனத்தில் பணம் திரட்ட ஒரு திட்டம் உருவாயிற்று.

நேராகத் தச்சனிடம் சென்றான். அவனிடம் பொந்தத் தடியொன்று செய்யச் சொன்னான். அதைப் பெற்றுக்கொண்டு குலசேகர பாண்டியன் நகர்வலம் வரும்போது வழியே சென்று நின்றான். பாண்டியனை வணங்கினான். கூட்டத்தைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே சென்றான் பாண்டியன். தளபதி காளிங்கன் வீணாதிவீணனைக் கண்டான். பாண்டியன் கோட்டையை விட்டுச் சென்று விட்டபிறகு, வீணாதிவீணன் காளிங்கனைச் சந்தித்தான். காளிங்கன் இவனை ஒரு வரிவசூல் அதிகாரியென்று நினைத்துக் கொண்டான். குலசேகரனே இரகசியமாக இவனை நியமித்திருக்கலாம் என்று எண்ணிக் கொண்டான்.

இந்நிலைமையைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டான் வீணாதிவீணன். நூறு தடியர்களைத் தனக்கு வேலைக்காரர்களாக நியமித்துக்கொண்டான்.

தன் மனத்திற்குள் பின்வருமாறு எண்ணினான்.

"சாதி கேட்கவில்லை ஊரும் பேரும் கேட்கவில்லை,
செயலாகச் சந்திக்கின்ற செய்தி கேட்கவில்லை
பார்த்துக் குடக்காசுக்கு உத்தாரங் கேட்பதென்ன?
பண்டியன் முகத்தில் சிரிப்பாணியொன்றே போதும்
கைத்தடியும் தந்து பாண்டியன் கற்பித்தான்
காசு வேண்டுமென்று கடையில் சென்று நின்றான்.

வெற்றிலைக் கட்டுக்கு வரி போட்டான். கொடுக்க மறுத்தவரை அடி உதையால் மிரட்டினான். கடைக் காரர்களெல்லோரும் வரி கொடுத்தார்கள்

குளக்கரைக்குச் சென்றான். படியின் மேல் வைத்த குடமொன்றுக்கு ஒரு காசு வரியென்றான். பெண்கள் திகைத்தனர். காளிங்கன் வீட்டு வேலைக்காரி குட மெடுத்து வந்தாள். அவள் தைரியமாக அவனை எதிர்த் துப் பேசினாள்

"வாவிக்கரைப் பெண்களைச் சேவிக்கவோ வந்தாய்?
மாப்பிள்ளைக்கு ஆகுவாயோ பேய்ப்பறச்சி மகனே!
நாட்டிலே குடக்காசு வாங்கும் பிணமே நீ
நாய்க்கும் பேய்க்கும் வள்ளியூரில் மூப்புவந்து போச்சோ,
ஊட்டி தெரிக்க கிணத்துக்குள்ளே தள்ளிப் போட்டு
உண்டைக் கல்லைத் தானெடுத்து மண்டையில்
போடெ"ன்றாள்.

அவன் பதிலுக்குக் கோபமாய்ப் பேசி "குடத்தை எடுத்துப் போ பார்க்கலாம்!" என்று சவால் விட்டான். அவள் நீர் முகந்து படியில் வைத்தாள். அவன் பொந்தந் தடியால் குடத்தை அடித்தான். அதில் பொள்ளல் விழுந்து நீர் சிந்தியது.

அதைக் கண்டு மற்றப் பெண்கள் காசைப் படியில் வைத்துவிட்டு நீர் மொண்டு சென்றனர். அவர்களனை

வரும் அழுதுகொண்டு காளிங்கனிடம் சென்று முறை யிட்டனர். காளிங்கன் சொல்லுவான்:

"பொல்லாப் புழுக்கச்சி தவக்குறைவால்
புத்திக்குறை வந்து கொண்டது காண்
பார்த்தால் ஒரு செம்புக் காசாலே,
பண்ணைக் கெடுத்தாளே பழிகாரி
ஆர்த்தங் கழுகு அடிபட்டாலும்
அரசன் கற்பனை யழிக்கப் போமோ?
குடிக்கத் தண்ணீர்தான் வேண்டுமென்றால்
குடத்துக்கு ஒரு காசு கொடுப்பாய்" என்றான்.

வீணாதிவீணன், குடக்காசுத் தண்டலுக்கு நாடு முழுதும் மணியக்காரர்களை நியமித்தான். குவிந்த காசையெல்லாம் நிலவறை தோண்டிப் புதைத்தான். இவ்வாறு சேர்ந்த பணத்தைக் கொண்டு அவன் தனக்கு கல்மாளிகை கட்டிக் கொண்டான். கூடம், சாவடி, காசுப்புறை சமைத்தான். கோட்டை கட்டி முகப்பு வாசலில் வெள்ளிக் கதவிட்டான். தான தருமங்களும் செய்தான்.

"பாடும் புலவர்க்கும் பிராமணர்க்கும்
பாலுக்காயிரம் பசு கொடுத்தான்."

இவ்வளவு தடபுடலைக் கண்டும் காளிங்கன் கண் திறக்கவில்லை. ஆகையால் வீணாதிவீணன் அரச னுக்கே இச் செய்தி எட்டுவதற்காகச் சில காரியங்கள் செய்தான்.

"பாண்டிய ராசர் களறிய வென்றே
பவளத் தூண்களும் நிறுத்துவனும்
நாட்டிலிருப்பவர் அறிய வென்றே
நாழிகை மணி தூக்குவனும்

கொடுத்த பணத்துக்கு வட்டிவாங்கி
குதிரை இருபதுங் கூட்டிக் கொண்டான்."

நல்லவருக்கு நல்லவனுகவும், கொடுமைக்காரனுக்கு கொடுமைக்காரனுகவும் அவன் வாழ்ந்து வந்தான்.

"சாந்த குணத்துக்குச் சமர்த்துக்காரன்
தடியால் கொடுக்கவும் சமர்த்துக்காரன்
மேலுஞ் சோறுபோட்ட இலேவாணிச்சி
வீட்டைக் கல்வீடாய்க் கட்டி வைத்தான்"

இவ்வளவும் செய்தும் அரசன் பார்வை அவன் மீது திரும்பவில்லை.

"செல்வபாண்டியர் அறிவதற்காய்ச்
செய்யாத தொழில் செய்ய வேணுமென்முன்,
காஞ்சிபுரத்துககும் தென் குமரிக்கும்
கையில் பணம் அஞ்சு கல்யாணத்தில்
வாஞ்சையாய்க் கேட்டு வாங்க வென்றே
வலது தோளில் தடியெடுத்தான்"

முதலில் வள்ளியூரில் திருமணவரி வசூலித்தான். பின்னர் நாடு முழுதும் வசூல்செய்ய ஆரம்பித்தான்.

இதன்பின் சாவு வரி வசூலிக்கத் தொடங்கினுன். பிணமொன்றுக்கு ஐந்து பணம் சுடுகாட்டில் வீஞதி வீணனுக்குச் செலுத்தவேண்டும். அவனது தடிக்காரர்களுக்கு அஞ்சி எல்லோரும் வரிசெலுத்தி விட்டார்கள்.

இங்கிலேயில் யார் ஆக்கிணை நடக்கிறதென்று நாட்டாருக்கு ஐயமுண்டாயிற்று. அவர்கள் தங்களுக்குள் ரகசியமாகப் பேசிக்கொண்டார்கள்.

"மண்டலந்தானெல்லாம் வீணுதிவீணன் மானியம்
தண்டல் கடமையும் ஆயமும் கோயில்தலமும்
சருவ விசாரிப்பும் வீணுதிவீணன் தனக்கே
நாட்டுக்குப் பாண்டியன் ஆக்கினையென்று நடக்கும்"

இவ்வாறு ராஜ்யாதிகாரமனைத்தும் வீணுதிவீணன் கையில் சேர்ந்துவிட்டது. குலசேகரன் இதனையறிய வில்லை. ஒருநாள் குலசேகரனும், அவனது ஒற்றன் நீல கண்டனும் மாறுவேடத்தில் வள்ளியூர் கோட்டைக்கு வந்தனர். அங்கு தன் செங்கோல் நடக்கும் விதத்தைக் காண ஊரினுள் நுழைந்து தெருவில் நடப்பதை யெல்லாம் கண்டான்.

ஒரு வீட்டினின்றும், கணவனை இழந்த ஒரு பெண் ணின் அழுகுரல் கேட்டது. குலசேகரன் வீட்டினருகில் நெருங்கி நின்று அவள் ஒப்பாரிப்பாட்டைக் கேட்டான்.

"கிளையும் என்னுடன் இருந்தாரில்லையே
கேட்டாலும் ஒரு காசு தருவாரில்லையே
குழிக்குள் போட்டுப் புதைத்தாலும்
கூடச் சுமப்பார் ஆருமில்லை.
பாட்டில் கிடப்பானைக் காட்டிலிட
பச்சரிசியும் கிடையாதே.
வீட்டைப் பிடுங்கியே விறகிட்டாலும்
வீணுதி வீணன் விடுவானோ?
மெழுகுதாலி மேல் பொன்னிருந்தால்
வித்துப்பணமஞ்சு கொடுக்கலாமே,
ஒழுகு வள்ளியூர்க் குமரப்பனே
உனக்கே அபயமென்றழுதனளே."

அந்த வீட்டில் சுண்ணும்பால் குறியிட்டு அரசனும் ஒற்றனும் அரண்மனை திரும்பினர். காலையில் அரசன் அரசவை கூட்டினான்.

குடிகளுக்குக் குறைகள் எதுவுமுண்டா என்று வினவினுன். காளிங்கன் அரசகட்டளைப்படியே யாவும் நடைபெறுவதாக விடை கூறினுன். அரசன் ஒற்றனைப் பார்த்துக் கண் சிமிட்டினுன். ஒற்றன் ஓடிப்போய் முன்னிரவில் ஒப்பாரி பாடிய பெண்ணை அழைத்து வந்தான். "நேற்று என்ன சொல்லி அழுதாய்?" என்று மன்னன் கேட்டான்.

"மாலையிட்டவன் பிணமாய்ப் போனுன்
வீட்டிலே குழந்தைகள் அஞ்சாறு உண்டும்
ஓலையொதுக்கில் கூரைக்குள்ளே
உப்புச் சிரட்டையும் காணுது.
சுடலைக் காட்டிலே புகையைக் கண்டால்
துட்டுத் தடிக்காரன் வருவானே.
மடவார் குடத்துக்கும் பிணம் தனக்கும்
வரியுண்டாச்சுதே என்றழுதே னன்றி
கெடுதியாய்ச் சொல்லியழவில்லை"

ன்று பயந்து நடுங்கியவாறே அவள் கூறினுள்.

குலசேகரன் காளிங்கன் முகம் பார்த்தான். காளிங்கன் திகைத்தான்.

பெண்ணுக்கு பணம் கொடுத்தனுப்பிவிட்டு மந்திரிமாரையும் துரை மக்களையும் பார்த்து மன்னன் கோபமாகக் கேட்கிருன்:

"வீணுதி வீணன் என்பவன் ஆரடா?
பேணியே குடக்காசு வாங்கவும்
பிணத்துக் கஞ்சு பணம் வாங்கச் சொன்னதும்
கலியாணத்துக்கு அஞ்சு பணம் வாங்கவும்
கண்ட பேர்க்கெல்லாம் காணியாய்ப் போச்சுதோ?"

என்று கேட்டுவிட்டு நிலைமையை சீர்திருத்த விரைவாகக் கட்டளையிடுகிறான். மதுரையில் தலைமை மந்திரியின் வீட்டை பூட்டி முத்திரை போடச் சொன்னான். தம்பிமாரை உடனே வரவழைத்தான். கோட்டை வாசலில் கழுநாட்டச் சொன்னான்.

இக்கட்டளை பிறப்பித்த பின் காளிங்கனைக் கடிந்து கொள்ளுகிறான்,

''செங்கோல் தப்பி நடக்கின்ற காலத்தில்
சேரக்கூடியே தெய்வத்தை நேருவரோ.
உலகம் கூடி ஒருவனைத் திட்டினால்
ஓடிப்போய் ஒதுங்கத் தலமுண்டோ?
கலகம் நாடும் தடி வீணாதிவீணன்
கருவூலந் தேடித் தரவன்றோ கற்பித்தாய்?''

(கடைசி இரண்டடிகளின் பொருள்:—''கலகக்காரனாகத் தடிபிடித்துக் கொள்ளையடிக்கும் வீணாதிவீணனையா என் ஆட்சிக்கு நிதி திரட்டித்தர நியமித்தாய்?'')

காளிங்கன், தான் அவனை நியமிக்கவில்லையெனவும், மன்னர் ஆணையென்றிருந்ததாகவும் கூறுகிறான்.

மன்னன், வீணாதிவீணனை அழைத்துவரப் பட்டாணியப் படைத்தலைவனை ஏவுகிறான். பட்டாணியன் போய்விட்டுச் சிறிது நேரத்திற்குள் பதைபதைத்தோடி வருகிறான்.

அரசரழைத்ததாகக் கூறியும் அவன் வராமல் தன்னை வெளியே தள்ளிக் கதவடைத்துக் கொண்டதாகக் கூறுகிறான்.

அரசன் சீற்றம் கொண்டு பெரும் படையோடு சென்று, கோட்டை வாசல் கதவுடைத்து வீணாதி

வீணனைத் தளையிட்டுக் கொண்டுவர ஆணையிடு கிறுன்.

படை குமுறியெழுந்து வீணுதிவீணன் கோட் டையை வளைத்துக் கொள்ளுகிறது.

வீணுதிவீணனே வா !
கொள்ளைக் குடக்காசை அள்ளிக் கொண்டோடிவா!

என்ற முழக்கம் எழுகிறது.

ஒற்றன் திருநீலகண்டன் படை முன்னர் தோன்றி ஒரு வார்த்தை சொல்லுகிறுன். அனைவரும் கேட்கின் றனர். வாயிலில் போய் தான் ஒரு சொல் கேட்டு வரு மட்டும் படை அமைதியாயிருக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறுன்.

ஒற்றன் குரல் கேட்டு வீணுதிவீணன் அவனைக் கோட்டைக்குள்ளே அழைக்கிறுன், அவனுக்கு ஆசன மளித்து மரியாதை செய்து வந்த விஷயத்தைச் சொல்ல வேண்டிக்கொள்ளுகிறுன். திருநீலகண்டன் அவனிடம் சொல்லுகிறுன் :

''குடக்காசு வாங்குதற்கு
கொடுத்தவனுத் தாரமுண்டோ?
நடக்குமென்று சொன்ஞர்கள்
நன்மை தின்மைக் கஞ்சு பணம்
சொன்னவரைச் சொல்லிவிடு
சொல்லா திருந்ததுண்டால்
கன்னமிட்ட காசிருந்தால்
கழுவேறப் போவானேன்?
காசு கண்டால் அரசர்கள்
களவு சோதிப்பாரோ?
பேசுதற்கு வாராமல்

புறங்காட்டி இருப்பாயோ ?
வீடுதன்னில் பணமிருந்தால்
விதரச்சொல் கேட்பானோ?
நாடு கட்டி யாளுதற்கு
நற்கால முண்டாச்சு.
தலையளவு வந்தாலும்
சடைவு வர விடுவாயோ?
குலசேகரனிடத்தில் கூடவா?'' (என்றுரைத்தான்)

வீரநிவீரன் இப்பேச்சை மறுத்துப் பேசாமல் பகட்டாக உடையணிந்து, வாளை இடுப்பில் கட்டி, காலில் செருப்பணிந்து கையில் வெள்ளித்தடி எடுத்து அவனோடு கூடவே அரசனிடம் சென்றான். அரசன் முன் அவன் எவ்வாறு நின்றான் என்பதை வில்லுப்பாட்டு கூறுகிறது:

''நடுச்சபையில் வந்து நின்று
நாடியிலே தடியூன்றி,
வடுப்படாப் பாண்டியனை
வணங்காமல் நின்றனனே.''

ஜனங்கள் அவனது தோற்றத்தையும், நடத்தையையும் கண்டு முணுமுணுத்தனர். அவன் அரசனுக்கு மரியாதை காட்டவில்லை என்று அவர்கள் அவனைப் பற்றி வெறுத்துப் பேசினர்.

பாண்டியன் அதனைக் கவனிக்காதது போல கேள்வி கேட்கத் தொடங்கினான்

''குடக்காசு வாங்க உனக்கு உத்தரவு கொடுத்தது யார்?''

வீரநிவீரன் தலைவணங்கிப் பேசத் தொடங்கினான்.

"காடுவெட்டிப் பயிரெடுத்த
கையறிய மாட்டேனோ?
பாடுபட்டு வியாபாரம்
பண்ணுதற்கும் அறியேனோ?
என்னைப்போல வீட்டுவழி
இரந்து குடித்தாருமுண்டோ?
மின்னிடையார் தம் காலால்
மிதிபட்ட பேருமுண்டோ?
பாண்டியனே நீ என்னைப்போல்
பட்டினியாய்க் கிடந்ததுண்டோ?
வேண்டாத துன்பத்தை
விலக்கி வைக்கத் திறமுமுண்டோ?
ஊர் முழுதும் அழுதழுது
ஓலமிட்டுத் திரிந்தேனே!
சாருமிந்தச் சனமுழுதும்
சாகாமல் இருந்தாரோ?
அழுத பிள்ளைக் கிரங்காட்டால்
அம்மையுண்டோ, அப்பனுண்டோ?
தொழுவேறி விழும்புலியைத்
துரைமக்கள் குத்தாரோ?
உங்களுக்குத் தண்டி வரும்
ஊர்ப்பகுதி குறைந்துண்டோ?
தங்களுக்குக் கேள்வியுண்டு,
தனித்தவர்க்குக் கேள்வியில்லை.
பணங்கொடுத்துக் கன்னடியன்
படை கூட்ட மாட்டானோ?
களத்திலுள்ள பாண்டியனை
கழுத்தறுக்க மாட்டானோ?
வெட்ட வரும் சேவகனை
விலக்காதோ குடக்காசு?
ஊட்டுகின்ற வாணிச்சி போல்
உங்களுக்குப் புத்தியுண்டோ?

பாப்பாரை மந்திரியாய்
வைத்திருந்த ராசாவே!
பண்புடைய என் வீட்டில்
பணப் பெருக்கைப் பாரு(மென்றான்).”

ஒவ்வொரு மனிதனும் தொழில் செய்து பிழைக்க அரசன் வழிசெய்ய வேண்டும். தொழில் செய்பவனுக்கு இடையூறுகள் விளைவித்தால் அவன் இரந்துண்டு அலைவான். இரப்போருக்கும் துன்பம் விளைவித்தால் அவன் கொள்ளையடிக்கத் துணிவான். வயிறு நிறை யச் சோறு கிடைத்தால் திருட்டுப் புத்தி எவனுக்கும் தோன்றாது. சோறில்லாதவனுக்குக் காசு கொடுத்தால் கன்னடியன் படையில் சேரமாட்டானோ? இலவாணிச் சிக்கு இருக்கிற புத்தி உங்கள் மந்திரிக்கு இல்லையே! என்று இடித்துப் பேசினான்.

“பணப்பெருக்கைப் பாரும்” என்று வீணாதிவீணன் கூறியதும் அவனுடைய ஏவலர்கள் அவனுடைய வீட்டின் கீழறையில் சேமித்து வைத்திருந்த செல் வத்தை யெல்லாம் கொண்டு வந்து அரசன் முன்பு வைக்கிறார்கள். வெள்ளிக் காசும், பொற் காசும், மரக்கால்களில் நிறைந்து காணப்படுகின்றன.

அரசன் வீணாதிவீணனை யானை மேல் ஏற்றி ஊர்வலம் செய்வித்து மறுபடி தன்முன் அழைத்துவரச் சொல்லுகிறான். நகர்வலம் செய்து வந்த பின் வீணாதி வீணன் பாண்டியனை வலஞ்சுற்றிச் சேவித்தான். தலை குனிந்து மரியாதையாகக் குலசேகரனைப் பார்த்து,

“மட்டில்லாத விறகு சுமந்தேன் நான்,
மதயானை சுமந்துதே என்னைத்தான்,
முன்னமே உன்னைச் சந்தித்த பாக்கியம்,
மூன்றுகோடி பணக்காரன் ஆனேன் நான்.

உன்னைக் கேளாது உனக்கென்று தேடினேன்,
உலகில் குத்தம் எனக்கில்லைதான்'' (என்றான்).

அரசன் அதிசயித்து அவனை நோக்கினான். விஞ்ஞாதிவீணன் மேலும் சொல்லுவான்:

''நன்மை தின்மைக்கு அஞ்சுபணம் நீக்கினேன்,
நாட்டில் குடக்காசையும் நீக்கினேன்;
புன்மையான புலையாட்டுத் தேடினேன்;
பொக்கிஷத்துக்குள்ளே போட்டுக் கொள்வாய்''
(என்றான்)

அரசன் அச்செல்வத்தை ஆறு கூறிட்டு வள்ளியூர் குமரன் கோயிலுக்கும், வறுமை வாய்ப்பட்ட பெரியோர் களுக்குப், பிராம்மணர் வேள்விகளுக்காகவும், சிவாலயப் பூசைச் செலவுக்காகவும், அரச பொக்கிஷத்திற்கும், விஞ்ஞாதிவிணனுக்கும் அளித்தான். விஞ்ஞாதிவீணனை இளைய மந்திரியாக நியமித்தான்.

இனி, வாழ்த்தோடு கதைப் பாடல் முடிகிறது.

''வள்ளியூர் குமரப்பன் வாழிதான்.
வண்மைசேர் குல பாண்டியன் வாழிதான்
செந்தமிழ்க் கவிராசர் வாழிதான்
தெள்ளிதான வீரர்களும் வாழிதான்
சைவசிந்தாமணிப் புலவர் வாழி
புத்தி கூர்ந்து படிப்பவர் கேட்பவர் வாழி
பொருளும் இன்பமும் பெற்றுப் பூதலம் வாழி!''

———

ஆராய்ச்சியுரை

செவிவழிச் செய்திகள்

வீணாதிவீணன் கதையின் சிறப்பியல்புகளை அறிய, அக்கதை நிகழ்ச்சியின் சரித்திர காலத்தை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

இக்கதை 'ஐவர் ராசாக்கள் கதை' என்ற கதைப் பாடலின் ஓர் உபகதை என்று குறிப்பிட்டோம். ஐவர் ராசாக்கள் கதையின் கதைப்பொருளின் சுருக்கத்தையும் முன்னரே குறிப்பிட்டோம்.

கன்னடியர் படையெடுப்பின் போது பாண்டியர்கள் எதிர்த்துப் போராடிய வரலாற்று நிகழ்ச்சியே இக்கதையின் கருவாகும்.

இக்கதையொன்று மட்டுமில்லாமல் இன்னும் பல கதைகளும் இந்நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டு வழங்கி வந்திருக்கின்றன. "பஞ்சபாண்டியர் கதை" "வெட்டும் பெருமாள் கதை" "கன்னடியன் படைப் போர்" முதலியன அவை.

இவையாவும் பலவிடங்களில் பாண்டியரும் கன்னடியரும் போராடியதாகக் கூறுகின்றன. முடிவில் பாண்டியர் உயிர் நீத்ததாகவே கூறுகின்றன.

எனவே இக்கதைகள் ஒரே ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிடுவனவல்ல. பல நூற்றாண்டுகளாக நடைபெற்று வந்த ஆதிக்கப் போராட்டத்தில், சிற்சில பகுதிகளில் நடந்தவற்றை முதன்மைப்படுத்தி, பல்வேறு நிகழ்ச்சிகளையும் கதையோடு பொருத்திக் கற்பனையால் இணைத்துக் கூறுகின்றன.

கன்னடியர் – பாண்டியர் போர் பலவிடங்களில் நடந்ததாக நெல்லை மாவட்டத்தில் செவிவழிச் செய்திகள் வழங்கி வருகின்றன. அதற்கு ஆதாரமாகச் சிற்சில தொல்பொருள் சான்றுகளும் சுட்டிக் காட்டப் படுகின்றன

கயத்தாற்றின் அருகில் வெங்கலராசனுக்கும், வெட்டும் பெருமாள் ராசாவுக்கும் போர் நடந்ததாகவும், அப்போரில் கயத்தாற்றுக் கோட்டை அழிந்ததாகவும், வெட்டும் பெருமாள் போரில் மாண்டதாகவும் செவி வழிச் செய்திகள் அப்பகுதியில் வழங்கி வருகின்றன. இதற்குச் சில கல்வெட்டுக்களும், இளவேலங்காலில் காணப்படும் சிற்பங்களில் காணப்படும் சித்திரங்களும், கல்வெட்டும் சான்றுகக் காட்டப்படுகின்றன. கோட்டையின் சில பகுதிகள் இன்றும் பாழடைந்த நிலையில் காணப்படுகிறது எனவே கயத்தாறில ஒரு போர் நிகழ்ந்தது என்றும் அப்போரில் வெங்கலராசன் வெற்றி பெற்ருன் என்றும் முடிவு செய்யலாம். இப்போரைப் பற்றிய கதை தான் ''வெட்டும் பெருமாள்'' கதை. இக் கதை சாதி வரலாற்று நூல்கள் சிலவற்றில் காணப் படினும், அச்சு நூலாகவோ, எட்டுப் பிரதியாகவோ இதுவரை எங்கும் அகப்படவில்லை.

கன்னடியருக்கும் பாண்டியருக்கும் போர் நிகழ்ந்த இடமாகக் காட்டப்படும் மற்ருேரிடம் நெல்லை மாவட்டத்தில் நாகர்கோவில் செல்லும் பாதையில் நெல்லையிலிருந்து முப்பது மைல் தூரத்திலுள்ள வள்ளியூர் என்னும் சிறு நகரமாகும். இங்கு குலசேகரபாண்டியன் வாழ்ந்ததாகவும், அவனுடைய கோட்டையை கன்னட அரசன் அழித்து அவனையும் சிறைபிடித்ததாகவும் நாட்டுப் பாடல்கள் கூறுகின்றன. இதற்கு ஆதாரமாக

ஊருக்கு வெளியே உள்ள புஞ்செய் நிலங்களில் இன்று கிணறு வெட்டும்பொழுது புதைந்து கிடைக்கும் கற்றூண்களைக் காணலாம். அவை நாயக்கர் காலத்திற்கு முந்தைய சிற்ப அமைப்புடையவை. இப்பகுதியில் மூன்றுயுகங் கொண்ட அம்மன் என்ற பெயரில் ஒரு பீடம் இருக்கிறது. அதனை "மூன்றுலகுங் கொண்டாள்" என்ற பெயரின் திரிபு என்று கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்கள் கருதுகிறார்கள். அவர்கள் வள்ளியூரிலிருந்து கண்டெடுத்த கல்வெட்டும், நாகர்கோவிலின் ஒரு பகுதியான ஒழுகின சேரியிலிருந்து கண்டெடுத்த கல்வெட்டும் ஒன்றாகவே இருப்பதைக் கண்டுபிடித்து இவையிரண்டும் ஒரே மன்னன் காலத்தில் அவனுடைய ஆசைநாயகியால் வெட்டப் பெற்றவை என்றும், அவள் பெயராலேயே 'உலக முழுதுடையாள் சேரி' என்ற பெயரோடு அக்கோயில் கட்டப்பெற்ற இடம் வழங்கப் பெற்றதென்றும் கூறுகிறார்கள். எனவே வள்ளியூரில் நாயக்கர் காலத்திற்கு முன்னரே பழந்தமிழ் மன்னர் குலத்தின் கிளையொன்று ஆண்டு வந்தது என்பதற்கு, செவிவழிச் செய்திகளும், புதை பொருள்களும், சாசனங்களும் ஆதாரமாக அமைகின்றன.

நெல்லை மாவட்டத்தின் மேல் பகுதியில் சேரன் மகாதேவியென்னும் ஊரின் அருகில் சில பகுதிகள் கன்னடியர் போரில் தொடர்பு கொண்டதாகக் கூறுகின்றனர். தாமிரவருணியின் முக்கிய கால்வாய்க்கு கன்னடியன் கால் என்றே பெயர் வழங்குகிறது. தனக்கு கப்பம் கட்டிவந்த தென்காசிப் பாண்டியனது ஆட்சிக்குட்பட்ட பகுதிகளை ஆக்கிரமித்துப் பிடித்துக்கொண்டதற்காக, கேரள மன்னனைத் தாமிர

வருணிக் கரையில் எதிர்த்து வெற்றி கொண்டு தாமிர வருணிக் கரையில் வெற்றித் தூண் நாட்டியதாக அச்சுதராயனுடைய சாசனமொன்று கூறுகிறது. இவ் வெற்றிக்குப் பின்னர் பாண்டியன் மகளை அவன் மணந்து கொண்டு இரு மன்னர் குலத்திற்கிடையே உறவு ஏற்படுத்திக் கொண்டான் என்றும் விஜய நகர சரித்திர ஆசிரியர்கள் கூறுகின்றனர். இப்பகுதிகளில் கன்னடியர், கேரள அரசர்களோடும் அவர்களோடு நேசம் கொண்டிருந்த வேறு சிற்றரசர்களோடும் போரா டியிருக்க வேண்டும்.

இவ்வாறு பல போர்கள் கன்னடியருக்கும் பாண் டிய குலத்தினருக்குமிடையே நடைபெற்றிருக்கின்றன என்பது பல ஆதாரங்களின் மூலம் நமக்குத் தெளிவா கிறது. இப்போர்கள் எப்பொழுது தொடங்கின? இப் போர்களில் பங்கு கொண்டவர்கள் யார் யார் என்ற விஞக்களுக்கு நமக்குக் கிடைக்கும் ஆதாரங்களிலி ருந்து ஒரளவு தெளிவான விடைகூற முடிகிறது.

சாசனச் சான்றுகள்

பாண்டியர்கள் மதுரையையும், கொற்கையையும் தலைநகர்களாகக் கொண்டு ஆண்டு வந்தார்கள் என்பதைச் சங்க நூல்களும், பிற்காலக் கல்வெட்டுகளும் நமக்குத் தெளிவாக்குகின்றன. சோழர்களின் ஆதிக்க காலத்தில் பாண்டியர்கள் பெருமை குன்றித் தங்கள் தலைநகரைக் கைவிட்டு தெற்கே குடிபெயர்ந்து தென் காசி, கரிவலம் வந்த நல்லூர் முதலிய ஊர்களில் தங்கி ஆட்சியை நிறுவிக் கொண்டனர் என்று கருதச் சான்று கள் உள்ளன. ஆயினும் அவர்கள் மதுரையைக் கை

விட்டுவிடாமல் பல சோழ மன்னர்கள் காலங்களில் மதுரையைக் கைப்பற்றி ஆண்டு வந்தனர் என்பது, சோழமன்னர்கள் பன்முறை மதுரை மீது படையெடுத்துச் சென்று மதுரையிலிருந்து பாண்டியர்களை விரட்டி விட்டதாக தங்கள் மெய்க் கீர்த்திகளில் கூறிக்கொள்ளுவதிலிருந்து விளங்குகிறது. முதலாம் ராஜேந்திரன் தனது இரண்டாவது மகனை சுந்தரச்சோழ பாண்டியன் என்ற பட்டப் பெயரோடு மதுரையை ஆள நியமித்தான் என்பது அவனது சாசனங்களால் விளங்கும். ஆனால் அவனுடைய காலத்திற்குப் பிறகு பல சோழ மன்னர்கள் மதுரையைக் கைப்பற்றித் தீக்கிரையாக்கியதாக தமது கல்வெட்டுக்களில் சொல்லிக் கொள்ளுகிறார்கள். எனவே வலிமை குன்றியபோது மதுரையை விட்டு வெளியேறிய பாண்டியர்கள், தெற்கே சென்று படை திரட்டிக் கொண்டு வந்து மறுபடியும் மறுபடியும் தங்களது புராதனத் தலைநகரைக் கைவசமாக்கிக் கொண்டுள்ளார்கள் என்று தோன்றுகிறது.

பஞ்ச பாண்டியர்-பெயர்க்காரணம்

இனி 'பஞ்சபாண்டியர்,' 'ஐவர் ராசாக்கள்' என்ற தொடர் எப்பொழுது தோன்றியது என்று காண்போம். 'கௌரியர்', 'பஞ்சவர்' என்ற பெயர்கள் 7ம் நூற்றாண்டிற்கு முன்னரே பாண்டியர்களுக்கு வழங்கிய பெயர்களாகத் தோன்றுகிறது. அவர்கள் தம்மை சந்திர குலத்தவர் என்று கருதிக்கொண்டதும் அருச்சுனனோடு தம் குலப்பெண் ஒருத்தி மணஉறவு கொண்டதாக மகாபாரதம் கூறுவதைக் கொண்டும் இப்பெயர்களை அவர்கள் மேற்கொண்டனர் என்று கருதலாம். ஆனால் இச்சொற்களும் 'ஐந்து என்ற பொருள் இருந்ததாகத் தெரியவில்லை.

'ஐந்து மன்னர்கள்' என்ற பொருளில் முதன் முதலில் முதலாவது குலோத்துங்க சோழன் சாசன மொன்றில் பாண்டியர்கள் குறிப்பிடப்படுகிருர்கள். ஐந்து பாண்டிய மன்னர்களை ஒரு போரில் வென்றதாக அச்சாசனத்தில் கூறப்பட்டுள்ளது. இது குறித்து கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியார், "ஐந்து பாண்டியர்களுக்குள் நாட்டைப் பாகுபாடு செய்து கொண்டு, அவர்களுள் ஒருவனைத் தலைவனுகவும் முடிமன்னனுகவும் ஒப்புக்கொண்டு நாட்டைப் பரிபாலனம் செய்து வந்த முறை பல காலமாக வழக்கத்திலிருந்தது" என்று கூறுகிருர்.

முதலாம் ராஜேந்திரனுடைய காலத்தில் மதுரையை இழந்த பாண்டியர்கள், குலோத்துங்கன் காலத்திற்குள்ளாக ஐந்து சிற்றரசுகளை நிறுவி, அவ்வைந்து நாடுகளுக்கும் மேலாதிக்கம் கொண்ட ஒரு முடிமன்னனையும் தமக்குள் ஏற்படுத்திக் கொண்டார்கள் என்று முடிவுக்கு வருவது தவறல்ல.

பாண்டியர் ஏற்றம்

இவர்களனைவரும் சோழர் ஆட்சி வலிமை குன்றிய காலத்தில் ஒன்றுபட்டு தமது தலைவனை ஆதரித்து நின்றதால் பாண்டியர் வலிமை பெருகி தமது ஆட்சி நிலத்தை வடக்கு நோக்கி விஸ்தரித்துக் கொண்டார்கள். அக்காலத்தில் தான் சுந்தரபாண்டியன் I, ராஜராஜனை (III) த் தோற்கடித்து சோழ சாம்ராஜ்யம் முழுவதையும் வென்றடிப்படுத்திஞன். ஹாய்சாலர்களை கண்ணனூர் கொப்பத்திலிருந்து விரட்டிஞன். மூன்ரும் குலோத்துங்கன் வீழ்ச்சிக்குக் காரணமாகி, அவனது ராஜ்யத்தின் வடபகுதியைக் கைப்பற்றிக்

கொண்ட காடவர் குலாதிபதி கோப்பெருஞ்சிங்கனை வென்று கொங்கு மண்டலத்தைக் கைப்பற்றினுன், தமிழ் நாடு முழுவதும் அவன் ஆளுகைக்குட்பட்டது. காஞ் சியில் ஆண்டு வந்த கண்டகோபாலனைக் கொன்று காஞ்சியைக் கைப்பற்றினுன். மேலும் வடக்கே படை நடத்திச் சென்று நெல்லூரைக் கைப்பற்றினுன் அவன் இறக்கும்போது அவனுடைய ஆட்சி 'கொல்லத்திலி ருந்து நெல்லூர் வரை பரவியிருந்தது.'' என்று மார்க்கோபோலோ கூறுகிருர்.

அவன் காலத்திலேயே வடக்குப் பகுதியில் நெல்லூ ரில் தெலுங்குச் சோழர்களும், கொங்கு நாட்டில் கோப் பெருஞ்சிங்கனும் தலைதூக்கி தங்கள் தலைநகரங்களை மீண்டும் கைப்பற்றிக் கொண்டனர்.

சுந்தரபாண்டியனுேடேயே கூட்டாக ஆண்டுவந்த குலசேகர பாண்டியன் மறுபடியும் வடக்கே சென்று இழந்துவிட்ட நாடுகளை மீண்டும் வென்று பாண்டியர் ஆளுகைக்குக் கீழ் கொணர்ந்தான். அவன் வலிமை யும், திறமையும் மிக்க மன்னன். 50 ஆண்டுகளுக்கு மேலாகவே அவன் ஆட்சிபீடத்தில் வீற்றிருந்தான். சுந்தர பாண்டியன், குலசேகர பாண்டியன் ஆகிய பாண் டிய மன்னர்கள் காலத்தில் பல ஊர்களும், கோயில் களும் நிருமாணிக்கப்பட்டன. வலிமை மிக்க இவ்வர சர்கள் காலத்தில், பாண்டியர் கிளைக்குலங்களைச் சேர்ந்த சிற்றரசர்கள் அடங்கிப் பணிகேட்டு நடந்தனர்.

பாண்டியர் தாழ்வு

குலசேகரன் இறந்ததும் அரச பதவிக்குப் போட்டி ஏற்பட்டது. அவனது ஆசைநாயகி மகனுன சுந்தர

பாண்டியனுக்கும், பட்டத்து அரசியின் மகனான வீர பாண்டியனுக்கும் பதவிப் போட்டி காரணமாக போர் தொடங்கியது. இப்போரைப் பயன்படுத்திக் கொண்டு கேரள அரசன் ரவிவர்மன் குலசேகரன், படை கொண்டு காஞ்சிபுரம் வரை வந்தான். வீரபாண்டியன் அவனோடு சேர்ந்து கொண்டான். சுந்தர பாண்டியன், காகதீய மன்னன் பிரதாபருத்திரனைத் துணைப்படை கொண்டு வர அழைத்தான். முப்பிடி நாயக்கன் என்ற நெல்லூர்த் தளபதியை, பிரதாபருத்திரன் பெரும் படையோடு அனுப்பி வைத்தான். ரவிவர்மனும், வீரபாண்டியனும் தோற்றோடினர் சுந்தர பாண்டியன் வீரத் தலைவன் பட்டினத்தில் மணிமுடி சூடினான்.

மாலிக்காபூர்

ஆயினும் வீரபாண்டியன் பாண்டிய நாட்டின் ஒரு பகுதியில் ஆட்சி செலுத்திவந்தான் என்பது மாலிக்கா பூரின் படையெடுப்புக் காலத்தில் அவனிடமிருந்து ஏராளமான செல்வத்தை டில்லி ராணுவம் பறித்துக் கொண்டு சென்றது என்று சமகால முஸ்லிம் வரலாற்று ஆசிரியர்கள் கூறுவதிலிருந்து தெரிகிறது. சுந்தர பாண்டியன் போரிடாமல் பதுங்கிக்கொண்டு செல்வத்தையும் காப்பாற்றிக் கொண்டானென்றும், அவனுடைய மாமன் விக்ரமபாண்டியன் பெரும் படை சேகரித்து வந்து மாலிக்காபூரைத் தோற்கடித்து விரட்டியடித்தான் என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

இதற்குள்ளாகவே ஒரே காலத்தில் நாம் மூன்று பாண்டியர்களைப் பற்றிக் கேள்விப்படுகிறோம். விக்ரமன் வீரபாண்டியனையும், சுந்தர பாண்டியனையும்

ஒன்று படுத்தி. மாலிக்காபூரை விரட்டியதைப்பற்றிப் பல சரித்திராசிரியர்கள் குறிப்பிட்டிருக்கிருர்கள்.

மாலிக்காபூர் டில்லி நோக்கித் திரும்பியதும் மறுபடியும் சகோதரச் சண்டை முதிர்ந்துவிட்டது. 1311ல் அவன் மறுபடி திரும்பினுன். கொள்ளேயடித்துச் சென்ற பொருள்களேக் கண்டு ஆசைகொண்டு மீண்டும் கொள்ளேயடிக்க டில்லி சுல்தான்கள் அவனேயனுப்பினர், அவன் வீரபாண்டியன் அரசு வீற்றிருந்த காஞ்சி நகரையும் சுந்தரபாண்டியன் அரசு வீற்றிருந்த மதுரை நகரையும் கொள்ளேயடித்துவிட்டு ராமேசுவரம் சென்ருன். அங்கேயுள்ள புராதனக் கோயிலே இடித்து, அதன் செல்வத்தைக் கொள்ளே கொண்டு டில்லிக்குப் பயணமாஞன்.

அவனே மதுரையில் ஒரு பிரதிநிதியை நியமித்துச் சென்ருன் என்று மதுரைத் தலவரலாறு கூறும். ஆனல் அது உண்மையல்ல வென்றும் 1323ல்தான் கியாஸுத்தின் துக்ளக் அனுப்பிய படை மதுரையைக் கைப்பற்றியது என்று கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி கூறுகிருர். சாம்ராஜ்யத்தின் பிரதிநிதி மதுரையில் ஆட்சிபுரிய நியமிக்கப்பட்டான். இப்பிரதிநிதிகளின் ஆட்சி 1323 முதல் 1334 வரை நடைபெற்றது. 1334ல் ஜலாலூதீன் அசன்ஷா டில்லி சாம்ராஜ்யத்தின் மேலாதிக்கத்தை உதறியெறிந்துவிட்டு தானே சுதந்தர சுல்தான் பிரகடனம் செய்துகொண்டான்.

பாண்டியர் மதுரையைக் கைவிடல்

மதுரைச் சுல்தான்களின் ஆட்சிபற்றி மதுரைத்தல வரலாறு கூறுவதாவது :

"சாலிவாகன சகாப்தம் 1246 கொல்லமாண்டு 500 (கி.பி. 1324) ருத்ரோத்காரி வருஷம் ஆனி மாதம் வடக்கேயிருந்து வந்த ஆதிசுல்தான் மலுக்கு நேமி என்பவனும் மதுரை வந்து வாளால் விழித்துறங்கும் பாண்டியன் என்ற பராக்கிரம பாண்டிய தேவரைச் செயித்து பிடித்துக் கட்டிக்கொண்டு டில்லியில் அனுப்பிப் போட்டு ராச்சியத்தைக் கட்டிக்கொண்டான்."

'மலுக்கு' என்ற பெயரொற்றுமையைக் கண்டு இவனேமாலிக்காபூர் என்று ஒரு சாரார் கருதுகிறார்கள். மாலிக்காபூரின் படையெடுப்புக் காலத்தை முஸ்லிம் ஆசிரியர்கள் 1309, 1311 என்று வரையறுத்துக் கூறுகிறார்கள். இதனையே தென்னிந்திய வரலாற்று ஆசிரியர்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். அவன் படையெடுப்புக் காலத்தில் வீரபாண்டியனும், சுந்தரபாண்டியனும் தாயப் போரில் ஈடுபட்டிருந்தனர். விக்கிரம பாண்டியன் மாலிக்காபூரை முறியடித்து விரட்டினான். ஆனால் மதுரையை முஸ்லிம் சுல்தான்கள் கைப்பற்றிக் கொண்ட காலம் 1324 என்பது தல வரலாற்றுச் செய்தியால் தெரியவருகிறது. அது மாலிக்காபூரின் படையெடுப்புக்கு 13 ஆண்டுகளுக்குப் பின்னர் என்றேற்படுகிறது. மாலிக்காபூரின் படையெடுப்பு, அல்லாவுடீன் கில்ஜி டில்லியை ஆண்ட காலத்தில் நிகழ்ந்தது. 1324ல் கில்ஜி வம்சம் அழிந்து, துக்ளக் வம்சம் ஆளத் தொடங்கிவிட்டது. எனவே முகம்மதுபின் துக்ளக் தட்சிண ராஜ்யங்களை அடக்கி டில்லி ஆட்சியின் கீழ் கொணர்வதற்காக அனுப்பிய "மாலிக் ஸாதா" என்ற புகழ் பெற்ற தளகர்த்தனை அனுப்பி வைத்தான். இவனைத்தான் மலுக்கு நேமி என்று மதுரைத் தலவரலாறு

குறிப்பிடும் ஆதிசுல்தானுவான். அவன்தான் மதுரைச் சுல்தானிய ஆட்சியை நிறுவியவன். இவ்வாட்சி கி.பி. 1324 முதல் 1372 வரை நிலவியிருந்தது.

மதுரைச் சுல்தானிய ஆட்சி

இவ்வாட்சி குறித்து மதுரைத் தலவரலாறு மேலும் கூறுவதாவது:

"சகாப்தம் 1246 முதல் 1294 (கி.பி. 1324—1372) சாதாரண வருஷம் வரையான 48 வருஷம் அல்லாவுடீன் உடயூஜி, குத்புடீன், கியாதுடீன், நாசுருடின், அடில்ஷா, பஃருடின் முபரக்ஷா, அல்லாவுடீன் சிக்கந்தர்ஷா என எட்டு மகமதிய ராசாக்கள் மதுரையை ஆண்டார்கள். நாடு துலுக்காணியமாயிற்று. மதுரைக்கு வாய்த்த பெருமாளும் நாஞ்சி நாடு போனுர். பெரிய ஆலயத்துப் பஞ்சாட்சரமதிலும் பதினன்கு கோபுரங்களும், தெரு வீதியும் இடிபட்டன. கற்பக்கிரகம், மகாமண்டபம், அர்த்த மண்டபம் வரைக்கும் தப்பியிருந்தது. இப்போது பரியந்தம் துலுக்காணியமாயிருந்தது."

இக்காலத்தில் மதுரையைச் சுற்றியுள்ள பகுதியில் சுல்தான்கள் ஆட்சி நடைபெற்றது. ஆனுல் அதே காலத்தில் பாண்டிநாட்டின் தென் பகுதிகளிலும், திருப்பத்தூர் காளையார் கோவில் முதலிய பகுதிகளிலும் இந்த சுல்தான்கள் மதுரையில் ஆண்ட காலத்திலேயே பராக்கிரம பாண்டியனும்; அவனது வழிவந்த பாண்டியர்களும் வெளியிட்ட சாசனங்கள் கிடைக்கின்றன. எனவே பாண்டியர்கள் மதுரையினின்றும் பின் வாங்கி பல பகுதிகளில் தங்கள் கிளைக் குடும்பங்களை நிலை

நிறுத்தி மதுரைப் பாண்டியர்களது வழிவந்தோராக தம்மைக் கருதிக்கொண்டு ஆண்டு வந்தனர். பலமுறை மதுரையினின்றும் பின் வாங்கியபோதிலும் அவர்கள் மீண்டும் மீண்டும் மதுரைக்குத் திரும்பி விட்டனர் என்று கண்டோம். ஆனால் சுல்தானிய ஆட்சிக்காலத்தில் தான் அவர்கள் மதுரைக்கு மீண்டுவரும் முயற்சியைக் கைவிட்டு விட்டுத் தெற்கே பல தலைநகர்களை நிறுவிக்கொண்டனர்.

சுல்தானிய ஆட்சியை ஒழிக்க

கன்னடியர் வருகை

1. பல்லாள தேவன்

மதுரைச் சுல்தானிய ஆட்சியை அகற்ற ஹாய்சால மன்னன் மூன்றும் பல்லாள தேவன் 1342ம் ஆண்டு முயன்றான். சுல்தான் கியாத்துடீனுக்கும், பல்லாள தேவனுக்குமிடையே நடந்த போரில் சுல்தான் உயிர்நீத்தான். இவன் தான் மதுரைவரை படையெடுத்து வந்த கன்னட மன்னன். வெற்றிபெற்றுத் திரும்புமுன் இவன் கண்ணனூர் கொப்பத்தில் தண்டிறங்கியிருந்த போது முஸ்லிம் படையொன்று திடீரென்று படையைத் தாக்கி, இவனைக் கொன்றுவிட்டது. ஹாய்சாலப் படைகள் சிதறியோடின.

2. பக்க தேவன்

இதற்குப் பிறகு "பகன் என்ற இளவரசன் குர்பத் ஹஸன் கங்கு என்ற மதுரை சுல்தானைப் போரில் கொன்றான்" என்று ஷாம்ஸி—ஸிராஜ் அபீப் என்ற முஸ்லிம் வரலாற்று ஆசிரியர் கூறுகிறார். இவன் விஜய

நகர சாம்ராஜ்யத்தை நிறுவிய அரிகரன் புக்கன் என்ற இரு சகோதரர்களுள் இளையவனே என்று பேராசிரியர் திருவேங்கடாச்சாரி, 'மதுரா விஜயம்' என்ற நூலின் முகவுரையில் கூறுகிறார்.

3. குமார கம்பணன்

மூன்றாவது, மதுரைமீது படையெடுத்த கன்னடிய இளவரசன். மேற்குறிப்பிட்ட புக்கதேவனது மகன் குமார கம்பணன் உடையாரானவன். இவன் மதுரையின் கடைசி சுல்தானாயிருந்த முபரக் என்பவனை 1371ல் தோற்கடித்துக் கொன்றான். அவனுடைய வெற்றியைக் குறித்து அவனது மனைவியார் ஸ்ரீ கங்காதேவி மதுரா விஜயம்' என்ற பரணி நூல் பாடியுள்ளார்.

இக்காலத்தில் மதுரையிலும், மதுரையின் சுற்றுப் புறங்களிலும் பாண்டியர் கல்வெட்டுக்களோ, காசுகளோ கிடைப்பதில்லை. ஆனால் தென் தமிழ்நாட்டில் பலவிடங்களில் தென்காசி, கரிவலம் வந்த நல்லூர் பாண்டியர்களின் கல்வெட்டுகளும் திருநெல்வேலிப் பாண்டியர்களின் கல்வெட்டுகளும் கிடைக்கின்றன. "கம்பண உடையார் வட திசையிலிருந்து வந்து மதுரையில் அமைதியை நிலைநாட்டினார்" என்று மாறவர்மன் பராக்கிரம பாண்டியன் சாசனமொன்று கூறுகிறது. எனவே மதுரையில் சுல்தானிய ஆட்சி முடிகிற காலத்தில் வீரபராக்கிரம பாண்டியன் என்ற பாண்டியர் வழித்தோன்றல் தென்பாண்டி நாட்டில் அரசு செலுத்தி வந்தான் என்று விளங்குகிறது.

தென்காசிப் பஞ்ச பாண்டியர்

இப் பாண்டியன் 1340 முதல் 1380 வரை ஆட்சி செலுத்தினான். அவனுடைய சாசனங்களில் தன்னை

விஜய நகராட்சிக்கு உட்பட்ட சிற்றரசன் என்று அவன் கூறிக்கொள்ளவில்லை. அவனுடைய பரம்பரையினர் தென்காசியைத் தலைநகராகக் கொண்டு சுதந்தர மன்னர்களாகவே ஆண்டு வந்தனர். 1370 முதல் 1422 வரை ஐந்து பாண்டியர்கள் தென்காசியிலிருந்து தென் பாண்டி நாடு முழுவதையும் ஆண்டுவந்த செய்தி அவர்களுடைய சாசனங்களிலிருந்து புலனாகிறது. அதன் விஸ்தீரணத்தை அவர்களுடைய சாசனங்கள் தெற்கே கோட்டாறிலும், வடகிழக்கே திருப்பத்தூரிலும், வடமேற்கே கரிவலம்வந்த நல்லூரிலும், மேற்கே குற்றாலத்திலும் கிடைப்பதே அளவிட்டுக் காட்டும். அவர்கள் பழங்காலப் பாண்டியர்களின் பட்டங்களான கோமாறன் ஜடிலவர்மன் என்பனவற்றை மாறி மாறிச் சூட்டிக் கொண்டனர். இவர்களனைவரும் சுதந்திர மன்னர்கள் என்பதை இவர்களுடைய சாசனங்கள் அனைத்தும் காட்டும். இவர்கள் ஒருவருக்குப்பின் ஒருவர் ஆண்டனரா, அல்லது இருவர் மூவர் ஒரே காலத்தில் பல தலைநகர்களிலிருந்து, ராஜ்யத்தைப் பிரிவு செய்துகொண்டு ஆண்டனரா என்பது நமக்குப் புரியாத புதிராகவே உள்ளது. இவர்களது பெயர்கள்.

1. கோமாறன் வீரபாண்டிய தேவர்.
2 கோ. ஜடாவர்மன் பராக்கிரம பாண்டிய தேவர்.
3. ஜடிலவர்மன் குலசேகர பாண்டிய தேவர்.
4. மாறவர்மன் குலசேகர பாண்டிய தேவர்.
5. ஜடாவர்மன் விக்கிரம பாண்டிய தேவர்.

இவர்கள் புகழ்பெற்று விளங்கியதோடல்லாமல் நீண்டகாலம் ஆட்சி செய்தார்கள். இவர்களைப் பஞ்ச

பாண்டியர் என்றும் சகோதரர் என்றும் அழைக்கும் வழக்கம் பிற்காலத்தில் தோன்றியிருக்க வேண்டும். கதைப்பாடல்களும் மூத்த சகோதரனை குலசேகர பாண்டியன் என்றே அழைக்கின்றன.

பராக்கிரம பாண்டியன்

அரிகேசரி பராக்கிரம பாண்டியன் 1371 முதல் 1422 வரை 50 ஆண்டுக் காலம் தென்காசியில் ஆண்டான். அவனது சாசனங்கள் மிகப் பல. இவனே தென்காசிக் கோவிலைக் கட்டியவன். சிறந்த தமிழ்ப் புலமையும், கவித்துவ சக்தியும் வாய்ந்தவன். அவனுடைய சாசனங்களில் தன்னைப் பழைய பாண்டியர் குலப் பட்டங்களாலேயே வருணித்துக் கொள்ளுகிறான். அவன் விஜய நகரத்துக் கட்டுப்பட்ட அரசனல்ல என்பது அவனது சாசனங்களால் விளங்குகிறது. இவனது காலமும் விஜயநகர அரசன் தேவராயன் காலமும் ஒன்று.

கன்னடியர் படையெடுப்பு

4. நரச நாயக்கன்

1485ல் சாளுவ நரசிம்மன் ஹரிஹரனுடைய பரம்பரையை அழித்துவிட்டு தனது தளபதி நரசநாயக்கன் உதவியால் ஆட்சியைக் கைப்பற்றினான். வடக்கே வலிமை பெற்றிருந்த பிஜாப்பூர், கோல்கொண்டா, பாமினி முதலிய முஸ்லிம் அரசுகளின் தாக்குதலைச் சமாளிக்க நரசிம்மன் தமிழ் நாட்டிலுள்ள அரசுகளை தனக்கு கீழ்படியச் செய்வதற்காக நரசநாயக்கனைப் படையோடு அனுப்பினான். இதுவரை சுதந்தர ஆட்சி நடத்திய பாண்டியர்களை அடக்கி அவர்களை விஜயநகர ஆட்சிக்குக் கீழ் சிற்றரசர்களாக ஆக்குவது இப்படை

யெடுப்பின் நோக்கங்களில் ஒன்று. இப்படையெடுப்பு முடிந்தபின் நரசநாயக்கன் வெளியிட்ட சாசனம் ஒன்றில் அவன், ''சேர சோழ பாண்டியர்களையும்'' மான பூஷணனையும், கொடுந்துருக்கனையும் வென்று விட்ட தாக''க் கூறிக் கொள்ளுகிறான். அக்காலத்தில் சோழர் பரம்பரை மறைந்துபோய் விட்டது. சோழர் ஆட்சி மறைந்துபோன பிறகு காடவர் குலத்தைச் சேர்ந்த கோனேரிராஜன் தான் சோழ மண்டலத்தின் ஒரு பகுதியை ஆண்டு வந்தான். அவனைத்தான் 'சோழன்' என்று சாசனம் குறிப்பிடுகிறது. அவன் விஜய நகரத் தின் சிற்றரசனுயிருந்து, அங்குப் பதவிப்போட்டி ஏற் பட்ட குழப்ப நிலையில் சுயாதிக்கத்தை ஸ்தாபித்துக் கொண்டான். நரசநாயக்கன் அவனோடு போர் செய்து அவனை கப்பங்கட்டும்படி செய்தான். நரசநாயக்கனுல் தோற்கடிக்கப்பட்ட பாண்டியன் யார்? என்று அறிவது கன்னடியனோடு போரிட்ட பாண்டியன் யார்? என்ற ஆராய்ச்சிக்கு அவசியமாகும். 1480-ல் அரசு கட்டி லேறிய ஜடாவர்மன் குலசேகர பராக்கிரம பாண்டியன் தான் நரசநாயக்கனுல் தோற்கடிக்கப்பட்ட பாண்டியன். அவன் 1507 வரை அரசாண்டான். பஞ்சபாண்டியர்கள் தென்காசிப் பாண்டியர்களே என்று இப்பகுதியில் வழங்கும் கர்ண பரம்பரைச் செய்திகள் கூறுகின்றன. நரசநாயக்கனது சாசனம் கூறும் மானபூஷணனும், பாண்டியனும் பஞ்ச பாண்டியர்கள் என கதைப் பாடல் கள் குறிப்பிடும் பாண்டிய மன்னர்கள்தாமா? நரச நாயக்கன்தான் கன்னடப் படையெடுப்பாளனு? இவ் வாறு முடிவு செய்வதற்குத் தடையாகச் சில பிரச் சினைகள் எழுகின்றன.

கதையில் குலசேகர பாண்டியன் விஷம் தின்று இறந்து போகிறான். ஆனுல் நரசநாயக்கனோடு

போரிட்ட மானபூஷணன் இப்போருக்குப் பின்னும் பல ஆண்டுகள் சாசனங்கள் வெளியிட்டிருக்கிறான். படையெடுத்துவந்த கன்னடியன் மகளை பாண்டியனுக்கு மணம் செய்து கொடுத்ததாக எந்தச் சாசனமும் கூறவில்லை. தவிர, கன்னடியனும் பாண்டியரும் போரிட்ட இடங்கள் வள்ளியூரும், கயத்தாறும் என்று இரண்டு கதைப் பாடல்கள் கூறுகின்றன.

இப்போருக்குப் பின்னர் திருவனந்தபுரம் அரசன் பூதலவீர உதய மார்த்தாண்டன் படைகொண்டுவந்து தென்காசியைக் கைப்பற்றி ஜடில ஸ்ரீ வல்லப திரிபுவன ஸ்ரீவல்லப பாண்டியனை விரட்டினான். ஸ்ரீவல்லபன், விஜயநகர மன்னன் அச்சுத ராயனுக்கு உதவிகோரித் தூது அனுப்பினான். அவன் தனது தளபதி சின்ன திருமலையை அனுப்பி வைத்தான் சின்னதிருமலையும் பாண்டியனும் தாமிரவருணிப் போரில் பூதல வீரனைத் தோற்கடித்தனர். இவ்வுதவிக்காக ஸ்ரீவல்லபன் தனது மகளை அச்சுதராயனுக்கு மணம் செய்வித்து அளித்தான்.

இப்போர் பாண்டியரை எதிர்த்துக் கன்னடியர் நடத்திய போரல்ல. அவர்களது அரசு நிலையிட உதவிக்கு வந்த போராகும். மேலும் இவ்விரு அரச பரம்பரைகளும் மண உறவினால் தொடர்பு பெற்றன. தாமிர வருணிப் போர் 1532ல் நிகழ்ந்தது.

கன்னடியர் படையெடுப்பு

5. வித்தலராயன்

1544ல் மறுபடியும் விஜயநகர மேலாதிக்கத்தை எதிர்த்து, திருவனந்தபுரம் அரசர்கள் கலகக் கொடியுயர்த்தினர். விஜயநகர மன்னன் சதாசிவராயன்

தனது உறவினனும் தளபதியுமான வித்தலராயனை படையோடு அனுப்பினான். அப்பொழுது திருவனந்தபுரம் அரசனும், கயத்தாற்றில் ஆண்டுவந்த பாண்டியனும் ஒப்பந்தம் செய்துகொண்டு தென்காசிப் பாண்டியனைத் தாக்கினர். தென்காசி விஜயநகரோடு நேச உறவுடையதாக இருந்தது. இவர்களிருவரையும் கலகக்காரர்களாகக் கருதி வித்தலராயன் அவர்களை ஒடுக்க தெற்கே வந்தான். கயத்தாற்றுப் போரில் வெட்டும் பெருமாள் பாண்டியன் தோற்று, திருவனந்தபுரம் அரசன் உன்னிகேரளவர்மனிடம் தஞ்சம் புகுந்தான்.

வித்தலராயனோடு உடன்வந்த சின்ன திருமலை உன்னிகேரளவர்மனோடு போராடத் திருவனந்தபுரம் நோக்கிப் படைகொண்டு சென்றான். உன்னிகேரள வர்மன் சரணடைந்தான். வெட்டும்பெருமாள் அங்கிருந்து தப்பியோடி மறுபடியும் கயத்தாற்றுக்குத் திரும்பிப் போர் செய்தான்.

வெட்டும்பெருமாள்

அவன் தோல்வியுற்றுச் சிறைப்பட்டான் கதைப் பாடல் வெட்டும்பெருமாள் ராஜாவும் வெங்கலராசனும் போரிட்டதாகக் கூறுகிறது. கன்னடியனை வெங்கல ராசனே, விஜயநகர் தளபதி வித்தலராயன் என்று நாம் உறுதியாகக் கூறலாம். இதற்குக் கல்வெட்டு ஆதாரமும் உண்டு. கயத்தாறுக்கு அருகேயுள்ள இளவேலங்கால் என்னும் ஊரில் பத்துக் குத்துக்கற்கள் காணப்படுகின்றன. அவற்றில் குதிரைமேல் ஒருவனும், காலாள் ஒருவனும் சண்டையிடுவதாகச் சித்திரங்கள் செதுக்கப்பட்டுள்ளன. அவற்றின் கீழ் "வெட்டும் பெருமாள் வெங்கலராசன் போர்" என்ற தமிழ்க் கல்

வெட்டு ஒன்று காணப்படுகிறது. இக் கல்வெட்டின் காலம் 1547 என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இச் சம்பவங்கள் வெட்டும்பெருமாள் ராஜனின் கதைப் பாடல் சம்பவங்களோடு பெரிதும் பொருந்துகின்றன. வள்ளியூர் குலசேகர பாண்டியனைப் பற்றிய 'ஐவர் ராசாக்கள்' கதையோடும் ஓரளவு பொருந்துகின்றன. கன்னடியனிடம் பாண்டியன் தோற்றுப் போனான் என்பதும், பாண்டியன் மரணமடைந்தான் என்பதும் கதைப்பாடல் நிகழ்ச்சிகள் வரலாறு மூலம் நாமறியும் நிகழ்ச்சிகளுக்குப் பொருத்தமாக இருக்கின்றன. வரலாற்றில் போர் நடந்த காலம் 1544. இளவேலங்கால் கல்வெட்டு அக்காலத்திற்கு அணித்தான காலத்தைக் குறிப்பிடுகிறது. அதன்காலம் 1547.

வள்ளியூர் குலசேகரன்

6. ஐவர் ராசாக்கள்

வள்ளியூர்க் கோட்டையைக் கைப்பற்ற நடந்த போரைப் பற்றி ஐவர் ராசாக்கள் கதை கூறுகிறது.

மாலையம்மையின் புதல்வனான குலசேகர பாண்டியன் கொல்லம் 442ல் (கி. பி. 1226ல்) வள்ளியூரில் கோட்டை கட்டி, கோட்டாற்றில் தான் மணந்து கொண்ட ஆசை நாயகி உலகமுழுதுடையாளோடு சிறிது காலம் வாழ்ந்தான். அவனது வம்சத்தினர் 60 ஆண்டுகளுக்குப்பின் அங்கு ஆண்டு வரும்பொழுது கன்னடிய தேசத்தரசன் ஒருவன் தன் சேனைகளுடன் பாண்டிய நாட்டிற்கு வந்தான். அப்பொழுது வள்ளியூரில் ஆண்டு வந்த குலசேகரனுக்கு நான்கு சகோதரர்கள் இருந்தனர். அவர்கள் பெயர்கள், மூத்தும்

பெருமாள், முகிலம் பெருமாள், முடிசூடும் பெருமாள், பாண்டிப் பெருமாள் என்பன. முதல் படையெடுப்பு கன்னடிய அரசனுக்குத் தோல்வியில் முடிந்தது. அவன் நாடு திரும்பினுன். பின்னர் குலசேகரன் வள்ளியூர்க் கோட்டையை காளிங்கன் என்ற அதிகாரியின் பொறுப்பில் விடுத்து மதுரை சென்ருன். இடைக் காலத்தில் வள்ளியூர் கோட்டையின் ஆட்சியில் ஊழல் கள் மலிந்தன. அறம் குன்றியது. அதிகாரிகள் ஆணை மீறி நடந்தனர். மக்கள் இரக்கமின்றி ஏழையெளியவர் களைக் கொடுமையாக நடத்தினர். இக்காலத்தில் தான் வீஞ்ஞதிவீணன் வள்ளியூர்க் கோட்டைக்கு வந்தான். அவனுடைய வரலாறு முழுவதையும் நாம் அறிவோம். வீஞ்ஞதிவீணன் இளைய மந்திரியானதற்குப் பின், கன்னடியன் படையெடுக்கச் சந்தர்ப்பம் நோக்கியிருந்தான். முதற்படையெடுப்பில் குலசேகரன் காட்டிய தீரத்தைக் கேள்விப்பட்ட கன்னட இளவரசி அவனையே மணப்ப தெனத் தீர்மானித்து, தன் தந்தையிடம் தனது ஆசையைத் தெரிவித்தாள். கன்னடிய அரசன் திருமணத் திற்கு இணங்குமாறு இறைஞ்சி குலசேகரனுக்கு ஓலையனுப்பினுன். குலசேகரன் தூதுவனிடம், ''பகைவர் வீட்டில் பெண் கொண்டு அவர்களுக்கு அடிமையாக மாட்டேன்'' என்று மறுப்புக் கூறி அனுப்பினுன். இதனையறிந்த கன்னடிய அரசன் சீற்றம் கொண்டு அவனைச் சிறைப் பிடித்து, கட்டாயமாக தனது மகளுக்கு மணம் செய்விக்க படைகொண்டு வந்தான். பல ஆண்டுகள் முற்றுகையை எதிர்த்து நின்றபின் வள்ளியூர்க் கோட்டை கன்னடியன் வசமாயிற்று. பஞ்ச பாண்டியர் தப்பியோடி தங்கள் உறவினஞன திருவாங்கூர் மன்னனிடம் அடைக்கலம் நாடினர். அவன் கன்னடிய அரசனது சீற்றத்துக்கு அஞ்சி அவர்களுக்கு

தஞ்சமளிக்க மறுத்தான். அவர்கள் மேல்மலேக் காடு களில் அலேந்தனர். குலசேகரன் படைகளேக் கலேத்து விட்டு ஐந்து சகோதரர்களோடும், ஒரு சிறு படையோ டும் இரண்டொரு முறை வள்ளியூர்க் கோட்டைமீது திடீர் தாக்குதல் நடத்திஞன். பாண்டியர்களின் மறை விடத்தை ஒற்றர் மூலம் அறிந்து கொண்ட கன்னடி யன் பெரும் படையனுப்பி அவர்களேச் சூழ்ந்து கொள் ளச் செய்தான். அவர்களேச் சிறைப்படுத்த முயலும் பொழுது நடைபெற்ற போரில் நான்கு சகோதரர்கள் மாண்டனர். குலசேகரன் சிறைப்பட்டான். குலசேக ரனே பல்லக்கில் அமர்த்திக் கொண்டு செல்லும்பொழுது தனது கத்தியால் கழுத்தில் குத்திக்கொண்டு உயிர் விட்டான். கன்னடிய இளவரசி உயிர் நீத்த குலசேகர னேக் கண்டு அவனேயே மணந்து கொள்ள உறுதி பூண்டு நகரை அலங்கரித்து, தானும் மணவிழாக் கோலம் பூண்டாள். மங்கல உடையணிந்து, குதிரை மீதேறி குலசேகரனது சடலத்தை அலங்கரித்து அதற்கு மாலேயிட்டாள். பின்னர் அச்சடலத்தை எரிக் கும் பொழுது உடன்கட்டையேறிஞள்.

இதுவே ஐவர் ராசாக்கள் கதைப் பாடலின் சுருக்கம்.

கன்னடியர் வந்ததேன்?

கன்னடிய மன்னர்கள் எதிர்த்து நின்ற பாண்டியர் களேப் பற்றி அக்கால மக்கள் அறிந்திருந்தனர். கன்ன டிய மன்னர்கள் தமது நாட்டிற்கு வடக்கேயிருந்து வரும் முஸ்லிம் மன்னர்களின் படையெடுப்பைத் தடுக் கும் நோக்கமுடையவர்கள் என்பது தென்தமிழ் நாட்டு

மன்னர்களுக்கும் சிற்றரசர்களுக்கும் தெரியாது. ஏனெனில் 42 வருஷங்களாக மதுரையில் நடைபெற்ற சுல்தானிய ஆட்சியின் கொடுங்கோன்மையை இப்பகுதி மக்களோ மன்னர்களோ கண்டதில்லை. எனவே முஸ்லிம் ஆட்சியையும், தொன்மையான மரபு வழி நாகரிகத்தையும் பாதுகாக்க வேண்டுமென்று விஜயநகர அரசர்களுக்கு ஏற்பட்டிருந்த உணர்வு போல இப்பகுதி மக்களுக்கும், மன்னர்களுக்கும் ஏற்படக் காரணம் இல்லை. எனவே கன்னடிய மன்னர்களை எல்லை மீறி நுழைந்த பகைவர்களாகவே இவர்கள் கருதினர்.

கதைப் பாடல்கள் குலசேகரனைத்தான கதைத் தலைவனாகக் கொள்ளுகின்றன. அதற்குக் காரணம் தமிழகம் முழுவதும் ஒன்றுபடுத்தி ஆண்ட குலசேகரனின் பெருமையைக், நாடு சிதறி சுருங்கிச் சிறு சிறு பகுதிகளாகப் பிரிந்துவிட்ட பின்னரும் சிற்றரசர்கள் மறக்கவில்லை. அவனையே தங்களது முன்னோன் எனக் கருதினர். தமிழ்நாடு முழுவதும் பாண்டியர் ஆட்சி மீண்டும் பரவ வேண்டும் என்ற கனவு அவர்களை விட்டு நீங்கவில்லை.

ஒவ்வொரு கதைப் பாடலும் வெவ்வேறு சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பினும், பொதுவாகக் கன்னடியர்களது பல படையெடுப்புக்களையும் அவற்றில் தொடர்பு கொண்ட அரசர்களையும் கால வேறுபாடுகளை ஒதுக்கி சகோதரர்களாகவே பாவித்துக் கூறுகிறது. 'பஞ்ச பாண்டியர்' என்ற பண்டைப் பெருமையைக் கன்னடியரை எதிர்த்து நின்ற ஒவ்வொரு பாண்டியர்க்குல அரசனுக்கும், சிற்றரசனுக்கும் கதைப் பாடல்கள் பொருத்திக் கூறுகின்றன.

இப்போர்களின் காலம்

கயத்தாற்றுப் போர் நடந்த காலத்தில் தான் வள்ளி யூர்க் கோட்டைப் போரும் நடந்திருக்க வேண்டும், ஏனெனில் அதற்குப் பின்னர் நாயக்கர் காலம். அக் காலத்தைப் பற்றி கயத்தாறு வரலாற்றில் மறுபடியும் விஸ்வநாத நாயக்கன் காலத்தில் ஒற்றை மற்போரில் தோற்று பஞ்சபாண்டியர்கள் நாட்டை விட்டுச் சென்றதாக அறிகிறோம்.

ஆனால் வள்ளியூர் வரலாற்றில் நாயக்கர் கால சம்பவங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை. எனவே இப்போர் நாயக்கர் காலத்திற்கு முன்னர் நடைபெற் றிருக்க வேண்டும். அவ்வாருனால் கயத்தாற்றுப் போர் நடந்த பின் (1544) வெட்டும்பெருமாள் நாஞ்சி நாடு சென்றானென்றும் அவனைப்பின் பற்றிச் சின்னதிருமலே சென்றானென்றும் முன்னர் கூறினோம் அவ்வாறு நாஞ்சில் நாடு செல்லும் வழியில் வள்ளியூர்க் கோட்டை தாக்குதலுக்கு உட்பட்டிருக்கலாம் இதுதான் சான்று களினின்றும் நாம் வரக்கூடிய முடிவு.

ஆனால் ''ஐவர் ராசாக்கள் கதை'' ஏட்டுப் பிரதி வள்ளியூர்க் கோட்டையைக் குலசேகரன் கட்டிய காலம் கொல்லம் 442 (கி. பி. 1226) என்று தெளிவாகக் கூறு கிறது. கோட்டையழிந்தது 60 ஆண்டுகளுக்குப் பின்னர் என்றும் கூறுகிறது. அப்படியானல் 1286 ஆகிறது. இக்காலத்தில் புகழ் பெற்ற சுந்தர பாண்டிய னும் குலசேகர பாண்டியனும் ஆண்டுவந்த காலம். குலசேகரன் காஞ்சியைத் தெலுங்குச் சோழர்களிட மிருந்து மீட்டான் என்று சாசனங்கள் தெரிவிக் கின்றன. கதைப் பாடலும், காஞ்சியில் குலசேகரன்

வீராபிஷேகம் செய்து கொண்டான் என்று கூறுகிறது. குலசேகரன் வேணுடு மன்னனையடக்க தெற்கே வந்தான் என்றும் கோட்டாற்றில் போர் நடந்ததென்றும் சாசனங்கள் கூறுகின்றன. எனவே குலசேகரன் வள்ளியூர் வழியாக மதுரை சென்றிருக்கக் கூடும். புகழ்பெற்ற இக் குலசேகரனுக்குப்பின் தென்காசிப் பாண்டியர் வம்சத்திலும் இரண்டு குலசேகரர்கள் ஆண்டனர். இவர்கள் குலசேகரன் இறந்து 70 ஆண்டுகளுக்குப்பின் ஆண்டனர். ஆனுல் இவர்கள் காலத்தில் எல்லாம் கன்னடியர் நெல்லை மாவட்டத்தினுள் படையெடுத்து வரவில்லை. எனவே கதைப் பாடல் ஆசிரியர் தமது கதா நாயகனுக, கதைச் சம்பவங்கள் நடைபெறுவதற்கு சுமார் 300 வருஷங்களுக்கு முன்பிருந்தவனை ஏற்றுக் கொண்டார். ஆனுல் கோட்டை கட்டியது அவனே தவிர, கோட்டையை கன்னடியர் பாதுகாப்புக்கு எதிராகப் பாதுகாத்தது பாண்டிய கிளைப் பரம்பரையில் வந்த வேருெர் குலசேகரனுவான். இடையே 60 ஆண்டுகள் என்று கதைப்பாடல் கூறினுலும் இவ்விடைவெளி இரண்டு மூன்று நூற்றுண்டுகளாக இருக்கலாம். அப்படியானுல் கதைத் தொடக்கத்தில் வரும் குலசேகரனும், பின்னுல் சிறைப்பட்ட குலசேகரனும் வெவ்வேருனவர்கள். கோட்டை கட்டிய ஆண்டு 1226 என்று கொண்டாலும், அழிந்த காலம் வித்தலராயன் கயத்தாற்றில் வெற்றி பெற்ற காலத்துக்கு அணித்தானதாகவே இருந்திருக்க வேண்டும். அக்காலம் 1544 அல்லது 1545 ஆகலாம். கோட்டை மூன்னூறு ஆண்டுகள் நிலைபெற்றிருக்கலாம்.

கன்னடிய இளவரசி உடன்கட்டையேறிய ஊராக வடுகச்சிமதில் என்ற ஊர் சுட்டிக்காட்டப்படுகிறது.

அங்கு ஒரு கோயிலும் அவள் பெயரால் இருக்கிறது. ஆனால் இதுதவிர அவளைப் பற்றிச் சாசனச் சான்றுகள் எதுவும் கிடைக்கவில்லை. கதைப் பாடல் குலசேகரன் சடலத்தை கன்னடிய மன்னன் தன் நகரத்திற்கு கொண்டுபோய் விட்டான் என்று சொல்லுகிறது. இளவரசியும் கன்னட நாட்டின் தலைநகரில்தான் விநோதமான திருமணத்தை நடத்திக்கொண்டாள் என்றும், உடன்கட்டையேறினாள் என்றும்,கதைப்பாடல் கூறும். ஆனால், செவி வழிச் செய்திகள் வேறுவிதமாகக்: கூறுகின்றன. எனவே கன்னடிய இளவரசி உடன்கட்டையேறிய கதையைச் சரித்திர நிகழ்ச்சியாகக் கருதப் போதிய ஆதாரம் இல்லை.

கதைப்பாடல் இயல்பு

ஆனால் கதைப் பாடல்கள் வரலாறுகள் அல்ல. அவை வீர காவியங்கள். இடையே மனிதப் பண்பின் உயர்ந்த அம்சங்களைப் போற்றுபவை, சமூகச் சீர்கேடுகளைக் கேலி செய்பவை. இவற்றைக் கற்பனையால் உருவான நாட்டார் படைப்பு என்றே கொள்ளவேண்டும். ஆனால் அக்கற்பனை கட்டவிழ்ந்த ஆகாசக் கோட்டைகளல்ல. சரித்திர நிகழ்ச்சிகளையும், சரித்திர சூழ்நிலையையும் அடிப்படையாகக் கொண்டு மனிதப் பண்புகளில் உயர்ந்தனவற்றைப் போற்றி கதாபாத்திரங்களையும், கதை நிகழ்ச்சிகளையும், கற்பனையால் படைத்திருக்கிறார்கள் நாட்டுப் பாடல் கலைஞர்கள்.

இப்பாட்டில் சமூகச் சீர்கேட்டை கேலி செய்வதற்காக சுயமான கற்பனையில் உருவாக்கப்பட்ட பாத்திரமே வீணாதிவீணன். இடைவிடாத போரால் சீர்குலைந்த நாட்டில் அமைதி நிலவும்போது ஏற்படும் ஆட்சியின்

சீர்குலைவையும், குடிமக்களின் இழிநிலைமையையும் சுட்டிக்காட்டித் திருத்தவே வீணாதிவீணன் கதையை நாட்டுப் பாடல் கவிஞர் உருவாக்கினார்.

இக்கதையின் சிறப்பியல்பு

நாட்டுக் கதைப் பாடல்களின் கதாநாயகர்கள் சமூகக் கட்டுப்பாடுகளை மீறியதற்காக உயிர் விட்டவர்களாகவோ, தங்கள் இனத்தைப் பாதுகாக்கத் தியாகம் செய்தவர்களாகவோ, படையெடுப்பைத் தடுக்க வீரத்தோடு போராடி உயிர் நீத்தவர்களாகவோ, கிராம மக்களின் கன்று கால்களையோ,பயிரையோ காப்பாற்ற துணிவோடு போராடியவர்களாகவோ, சமூக விதிகளை மீறி உண்மையாகக காதலித்ததற்காகக் கொலையுண்டவர்களாகவோ இருப்பது மரபு. அரசின் கொடுங்கோன்மையையோ, சமூகக் கொடுமைகளையோ எதிர்த்து உயிர் விட்டவர்களும் கதைப் பாடல்களின் கதாநாயகர்களாக போற்றப்படுவதுண்டு. ஆனால் வீணாதிவீணன் தன்மை இவற்றிலிருந்தெல்லாம் வேறுபடுகிறது.

112438

ராபின்ஹூடும் வீணாதிவீணனும்

இங்கிலாந்து ராபின்ஹூட் என்ற வீரனைப் பற்றிய கதைப் பாடல்கள் வழங்கி வருகின்றன. அவன் ஜான் அரசன் காலத்தில் பிரபுத்துவக் குடும்பத்தில் பிறந்தவன். அரசன் அவனுடைய சொத்துக்களைப் பறிமுதல் செய்தான். அவனைப் போன்ற பல பிரபுக்களின் சொத்துக்களை அரசன் பிடுங்கிக் கொண்டான். ராபின்ஹூட் ஷெர்வுட் காட் காடுகளில் மறைந்துகொண்டு பல நண்பர்களைத் துணையாகச் சேர்த்துக்கொண்டான்.

அவர்களின் உதவியோடு அரசனுக்கும் அரசனது நண்பர்களுக்கும் சொந்தமான பொக்கிஷங்களைக் கொள்ளையிட்டு ஏழைகளுக்குப் பகிர்ந்தளித்தான். அரசனது கொடுமைகளுக்குள்ளானோரை விடுவித்தான். அரசனது கட்டளைக்கிணங்க கொடுமை செய்த வேலையாட்களைத் துன்புறுத்தினன். பெண்களுக்கும், கதியற்றவர்களுக்கும் உதவி செய்தான். இவனைப் பற்றி நூற்றுக்கணக்கான நாட்டுப் பாடல்கள் 13ஆம் நூற்ருண்டு முதல் 17ம் நூற்ருண்டு வரை தோன்றின. அவன் கொள்ளைக்காரனுயினும் அரசனது கொடுமையை எதிர்க்கத் துணிவு கொண்டிருந்ததால், மக்கள் அவன் துணிவைப் போற்றினர். கொடுமை செய்யும் அரசனது பொக்கிஷத்தைக் கொள்ளையடித்து, ஏழை மக்களுக்கு உதவியதால் அவனது இரக்க குணத்தைப் பாராட்டினர். ஆனுல் அரசனைத் திருத்தவோ, ஆட்சியின் போக்கை மாற்றவோ அவனுல் முடியவில்லை.

ஆனுல் வீஞதி வீணனின் இயல்பு வேறு. அவன் அனுதை. உறவினரின் வஞ்சனையால் தனது சொத்து சுகங்களை இழந்தவன். பசிபட்டினிகளை அறிந்தவன். எத்தொழில் செய்தும் உழைத்துப் பிழைக்க ஆசைப்பட்டான். ஆனுல் உயர்ந்த சாதியில் பிறந்ததால் அழுக்கு மூட்டை சுமந்து பிழைக்கக்கூட அவனுக்கு உரிமையில்லாமற் போயிற்று,

வள்ளியூர்க் கோட்டையில் அவனுக்குப் பிச்சையிடுவோர் இல்லை. காய்கறி கொண்டுவந்து விற்ருல் கோட்டைக் காவலர் பிடுங்கிக் கொள்ளுகிருர்கள். விறகு கொண்டு வரப்போனுல் சீட்டுக் கேட்கிருர்கள். சீட்டில்லாவிட்டால் விறகில் ஒரு பகுதியை லஞ்சமாகக் கொடுக்க வேண்டும். இந்த நாட்டு ஆட்சியில்,

" புல்லுப் பறித்தால் கேள்வியுண்டு
கொள்ளையடித்தால் கேள்வியில்லை"

இந்நிலைமையை மாற்ற அவன் முடிவு செய்கிறான். தனக்கு ஏற்பட்ட துன்பங்களால் அவன் சமூகத்தை வெறுக்கத் தொடங்கவில்லை. சமூக எதிரியாக மாறி விடவில்லை.

அவன் ஆட்சியின் கவனத்தை இவ்வூழல்களை நோக்கித் திருப்ப குடக்காசு வசூலிக்கத் தீர்மானிக்கிறான். கலியாணத்திற்கும், சாவுக்கும் வரி விதிக்கிறான். இதற்கு முதலில் தடையேற்பட்டாலும், பின்னர் அதிகாரிகளை மிரட்டியும், லஞ்சம் கொடுத்தும் வரிகளை வசூலிக்கிறான். ஆட்சியின் கண் திறக்கவில்லை. கோட்டை கட்டுகிறான். ஆயிரக்கணக்கான தண்டல்காரர்களை நியமிக்கிறான். இன்னும் ஆட்சி உறங்குகிறது.

இப்பணத்தை ராபின்ஹூடைப் போலவே இவன் செலவழிக்கிறான்.

விஞ்ஞதிவீணன் போதிக்கும் சமூக அரசியல் நீதி

குலசேகரன், உண்மையை அறிந்த பின் வீஞ்ஞதி வீணனை, இவ்வரி விதிக்க உனக்கு அதிகாரம் அளித்தது யார் என்று கேட்கிறான். அதற்கு அவனளிக்கும் பதில் 'முழுவதையும் கதைச் சுருக்கத்தில் கொடுத்துள்ளோம். இங்குதான் கொள்ளைக்காரர்கள் நாட்டில் தோன்றும் சமூக நிலைமைகளை அவன் விளக்குகிறான். தொழில் செய்து பிழைக்க ஆட்சி வசதியளிக்க வேண்டும். அதற்கும் முடியாதபோது வேலையற்றோருக்கு உணவளிக்க வேண்டும். துன்பத்தை விலக்கி

வைப்பது அரசின் கடமை. அழுத பிள்ளைக்கு இரங்கா விட்டால், அப்பன் அம்மை யென்ற பாசம் அதற்கு உண்டாகுமா? அப்பொழுது சமூகப் பிணைப்பும், சமூக உணர்வும் எப்படி ஏற்படும்? வரி வசூலிப்பது மட்டும் தான் அரசின் கடமையா? இந்நிலைமையிருந்தால் பணத் திற்காக ஏழை எளியவர்களை பணம் கொடுத்து அக் கிரமம் செய்யத் தூண்ட முடியும். பசித்திருப்பவனுக்கு சோறுதான் வேண்டும், அதனைப் பெற நியாயம் அநியாயம் பார்க்க மாட்டான். அரசன் வருமானம் குறைந்தால் ஆராய்வதுபோல, தனி மனிதன் வரு மானம் இல்லாமலிருந்தால் இது ஏன் என்று ஆராய வேண்டும். பசித்திருப்பவனை ஏன் என்று அரசு கேட்காவிட்டால் பணம் கொடுப்பவன் பக்கம் சேர்ந்து கொண்டு அரசை எதிர்க்கப் படை திரண்டுவிடும். பசித் திருப்பவனிடம் ராஜ விசுவாசம் பற்றிப் பேச முடியுமா? பசித்திருப்பவனிடம் பணம் கொடுத்து, “உன் அரசன் கழுத்தை அறு” என்றால் அறுக்க மாட்டானா?

“பணங் கொடுத்துக் கன்னடியன்
படைகாட்ட மாட்டானா?
களத்திலுள்ள பாண்டியனைக்
கழுத்தறுக்க மாட்டானா?”

நாட்டில் அனைவருக்கும் தொழில்செய்து பிழைக்க வசதியும், ஆட்சியில் நேர்மையும், பிறர் துன்பம் கண்டு சகியாது உதவும் தன்மையும் இருந்தால்தான் நாட்டின் பாதுகாப்பு ஸ்திரமாக இருக்கும். இல்லாவிட்டால் உள் நாட்டில் கலகமும் கொள்ளையும் தோன்றும். வெளி நாட்டார் படையெடுத்தால் துரோகம் தலையெடுக்கும். இவ்வாறு கூறி அவன் அரசியல் நீதி போதிக்கிறான். தான் அநியாய வரிகளால் சேகரித்த செல்வத்தை அரசனிடமே அளித்து விடுகிறான்.

முடிவு

இக்கதை நாட்டு மக்களிடையே சில நூற்றுண்டு களுக்கு முன்னரே பரவியிருந்த அரசியல் சமூக உணர்வுகளையும், லட்சியங்களையும் வெளியிடுகிறது. பல போர்களின் மத்தியிலும் தனி மனிதன் வாழ எல்லா வசதிகளையும் அளிப்பதே அரசின் கடமை; அதனைச் செய்யாத ஆட்சி உட்பகையாலும், வெளிப் பகையாலும் அழிந்து போகும்'' என்று தமிழ் மக்கள் உணர்ந்திருந் தனர் என்பதை இக்கதை விளக்குகிறது.

வீறுதி வீணன் வில்லுப் பாட்டு

குடத்தண்ணீருக்கு வரி

வீஞ்ஞதி வீணன் கதை

காப்பு

வீஞ்ஞதி வீணன் கதை நன்ருகவே குருவே துணே.

நாஞு வண்ணம் தொழி லெடுத்து
நகர் சேர் புரியப் படியுண்டு,
வாஞுல் மயங்கித் தள்ளாடி
மறையோர் தெருவிலிரந்துண்டு
கொள்ளா முதல் கா செடுக்க[1] வென்றே
குடக் காசுடனே[2] எடுபடுத்த
வீஞ்ஞதி வீணன் கதை தனக்கு
வேழ முகவன் காப்பாமே.

---

1 கொள்ளா முதல்காசு—அளவற்ற செல்வம்

2 குடக்காசு—குடத்துக்கு வரி.
பலதொழிலும் செய்து பிழைக்க வழியில்லாதுபோகவே பாண்டியன் கோட்டையில் குடக்காசு பறிக்கத் தடியெடுத்த வீஞ்ஞதி வீணன் கதை கூறக் கணபதி காப்புக் கூறிஞர்.

பாண்டி மண்டல முழுதுமாண்டருள் குலசேகரன்[3]
பண்பு பொருனைக் காஞ்சி கம்பை ஆறு வடமும்
செய்தார்.
ஆண்டு செங்கோல் நீதி முறை ஆண்ட தம்பிமாரும்
அரசுரிமை செய்திருந்த வளமை தன்னைப் பாட
வாஞ்சை வைத்துத் தானிருந்த நாஞ்சில் நாடுதன்னில்
வான் புதுவையூரில் சுப்பிரமண்ய மகராஜன்
நாஞ்சிக் கோட்டை மூன்று முக நாச்சியாரைப்[4] போற்றி
நற்குருபரர்க்குக் குமரன் பொற்பாதந் துணையே!

---

3 குலசேகரன்—தமிழ்நாடு முழுவதும் ஆண்ட குலசேகரன், சுந்தரபாண்டியன் உடன் ஆண்டவன். தென்பாண்டி நாட்டைக் கொற்கையைக் கோநகராகக் கொண்டு ஆண்டவன் இவனும், சுந்தர பாண்டியனும் குமரி முதல், நெல்லூர் வரையுள்ள பகுதிகளை வென்று ஆண்டுவந்தனர். அவனுடைய தம்பிமார் என்று பின்னர் தோன்றிய பாண்டியர் கிளை மரபினர் தம்மை அழைத்துக்கொண்ட துண்டு.

4 மூன்றுமுக நாச்சியார்—ஒழுகினசேரி என்று இன்று வழங்கும் உலக முழுதுடையாள் சேரியில் கோயில் கொண்டிருக்கும் திரிபுவனசுந்தரி. இவளை 'மூன்றுலகு கொண்டாள்' என்று சாசனங்கள் அழைக்கின்றன. இக்கோயில் பாண்டிய மன்னன் ஒருவனுல் தனது காதல் நாயகியின் பெயரால் கட்டப்பட்டதென்றும் அவளே ஐவர் ராசாக்கள் கதையில் குறிப்பிடப்படும் நடனமகளென்றும் கவிமணியவர்கள் எழுதியுள்ளார்கள். மூன்றுமுக நாச்சியார் என்பது திரிபு, மூன்றுலகுகொண்ட நாச்சியார் என்பதே சரியானது. கோயில் கட்டியவர்கள் பெயரால் அவை வழங்கப்படுவதை சாசனங்கள் மூலம் நாம் அறிகிறோம். 'திரிபுவனமாதேச்சுரம்' 'ராஜா ராஜேச்சுரம்,' 'பல்லவனேச்சுரம்' முதலியன இக்கூற்றிற்கு எடுத்துக்காட்டுகள்.

பிறந்த ஊர்விட்டுப் புறப்படுதல்

கால மாரிதான் பொழியும் மேல வெம்பனூரில்
கங்கை குல வேளாளர்[5] வம்சத்திலே வந்தோர்
மூலமான தாய் தகப்பர் எல்லாமே ஒடுங்கி
மோச மில்லாச் செல்வத்தையும் நாசகால மாக்கி
இரக்கப் போற வேளையிலே சிரிக்கப் போருரென்று
எட்டு நாளாய் வீட்டைத்துப் பட்டினியும் பார்த்தான்.
சரிக்குச் சரியாயிருந்தா உத்தாரமு முண்டு
சத்தே தாட்சிவந்தா[6] உத்தாரமுமில்லை⊗
இத்தலத்தில் கிடந்தால் செத்துப் போவேமென்று
இராத்திரியாய் வீடடைத்து யாத்திரையாய்ப் போனுன்.

வண்ணனிடம் வேலை கேட்டல்

வித்தகமாய் வெளியிலவர் ஒரு நினைவு வந்து
''வேண்டிக் குடித்தே பிழைப்போ மாண்டிக் கோலங் கொண்டு
கம்பு போட்ட சொட்டைக் காதில் சொம்பு தூக்கினுக் கால்
கருத்தில் கவலையில்லை' ¶ என்று முருக்கன் வீட்டில் சென்ருன்.

---

5 கங்கைகுல வேளாளர்—கார்காத்தார் மரபினர்

⊗ செல்வத்தில் சமமாயிருப்பவர்களைத்தான் சுயசாதியினர் மதிப்பார்கள். சிறிது தாழ்ந்துவிட்டாலும் மதிக்கமாட்டார்கள்.

6 சத்தே தாட்சி—சற்றே தாழ்வு

¶ பொற்குழையணிந்த காதில் செம்புக் கடுக்கன் அணிந்தால் கவலையில்லாமல் பிச்சை ஏற்கலாம் என்று நினைத்தான்.

"தம்பிரானே யொன்று மில்லை தட்டழிந்து போனேன்
சாதிக் கிழிவாக என்னை சோதிச்சுதே தெய்வம்
பந்தி நீக்கு வார்களென்று கந்தை தூக்க வந்தேன்
பத்திரமாய்க் காதிலொரு முத்திரை போடு"[7] என்றான்.
நொந்த வார்த்தை சொல்லிக்கொண்டு வந்ததவனைப்
பார்த்து,

"புத்திகெட்டேன் என்று சொல்லி மெத்தச்
சடையாதே!
பித்தரோட வேடத்துக்கு முத்திவீடுதூரம்
பிச்சை வாங்கச் சொல்ல வில்லை கச்சை தொட்ட
தெய்வம்
உண்ணக் கிடையாத தொழில் பண்ணிக் கொள்ள
வேண்டாம்."

"யோகக்காரன் நீயென்றே போகச் சொல்லிவிட்டீர்
எண்ணமுள்ள புண்ணியத்தை நண்ணியல்லோ
வந்தேன்,
இட்டமாக ஆண்ட வீடு மொட்டையாகப் போச்சு.
எந்தனுட காலவினை இந்தப்படி ஆச்சு"
என்று காட்டு வழி கேட்டு வள்ளியூர் நாட்டுவழி
வந்தான்.

வள்ளியூர்க் கோட்டையடைதல்,

பிச்சையேற்றல்

மத்தக மதக் களிறு கத்துகின்ற கோட்டை
மல்லருட[8] வாசல் விட்டு மெல்ல வந்தான்

---

7 முத்திரை- வண்ணான் என்று அடையாளம் தெரிவதற்காகப் போடப்படும் முத்திரை.

8 கோட்டைமல்லர்—வெளிக் கோட்டைக் காவலர்

ஏகாந்த வன்னியர்கள்[9] எங்குச் செருமிம் வாசல்
ஏத்தத் தெருவில் கிடக்கின்ற ஓட்டை யெடுத்து
மங்கலப் பெண்களிருக்கின்ற கூடத்து வாசல்
"மாதாவே பிச்சையிடம்மா" எனவே யுரைத்தான்.
கூடத்துக் கட்டிய சங்கிலி நாயுங் குரைக்க
கோல் கொண்டு சின்னக் குழந்தைகள் குண்டியில் குத்த.
மூடிக் கிடக்கின்ற காடிக் கஞ்சி விடுமுன்னே
முக்குநுனி கொண்டு வெள்ளட்டி[10] வார்த்து மூக்கில்
கஞ்சிப்புளிக்கு பறுக்கை அஞ்சாறு கலந்து
கையோட்டில் விட்டவள் தள்ளியடைத்தாள் கதவை
மிஞ்சின நீரைக் கொண்டு சென்றுனே பின்னுமோர் வீட்டில்,
நீக்குங் கதவுக்கப்பால் நின்று சத்தத்தை விட்டான்.
"கூப்பிட்ட தார்பிலே[11]"?, குத்து வெட்டு கொல்லு' என்று,
கோவித்து வாசல் கதவி லெறிந்தான் குறட்டால்
சாப்பிட்டது போதுமென்று கண் காணுமல் தப்பி
தள்ளாடி தள்ளாடி பின்னுமொரு வீட்டினில் சேர்ந்தான்.
கிறக்கப்பொழுது[12] மங்கிருக்கப் போவோமினியென்றே
எரிகின்ற குப்பையை நெத்திக்கும் நெஞ்சுக்குமிட்டான்.
அரித்த தலைமயிர் கொண்டையை உச்சி மேலாக்கி

---

9. வன்னியர்—உள்கோட்டைக் காவலர்--அகம்படையர்

10 வெள்ளட்டி—வாந்தி

11. பிலே—பயல்

12. கிறக்கப்பொழுது—மயக்கம் வரும் வேளை

"அரகரா தெய்வம் குருதர்மம் பிச்சையிடம்மா"
என்று பண்டுபாடம் பண்ணு[13] கண்டமானப்
பாட்டுப்[14] பாடி,
பாஷை லாடப் பரதேசி போலப் பகட்ட
வண்ட வெள்ளாட்டி யோர் முண்டச்சி சீக்கிரம்வந்து
"வந்தீரோ பண்டாரம் திண்ணைக்குள் சாப்பிட வாரும்!
வாங்கிக்குடிக்கவோ மூங்கிலும் போல வளர்ந்தாய்
மாப்பிள்ளைக்காகாத காப்பிலிக் கூத்தி மகனே!
தாங்கிப் பிடித்து சமைக்கின்ற சொத்தினைத் தந்தால்
சாகிற வேளை கைலாசம் காட்டித் தருவாய்".
சட்டிக் கறிக் கள்ளுஞ் சாறுக்கும் காணும்
கன்னத்தில் போட்டுப் பயலைக் கயிற்றினுல் கட்டி
திட்டி அடித்தந்த மொட்டச்சி வாரியல் தேட
சீவனைக் கூட்டிக்கொண்டு ஓடினுன் மீண்டும்
தெருவில்!
"பணத்துக்கரிசி பதக்காகிலும் இந்தப் பாடுடா[15]
பார்த்துக் கொள்ளடா குமாரப்பா!" என்றே போய்ப்
படுத்தான்.
கணக்குள்ளதாய் விடிவெள்ளி உதயத்தைக் காட்ட
கவ்வையைக் கூடமுடுக்குதே கும்பியின் காந்தல்
வெளுக்கும் பொழுதிலே பல்லையையும்கூட மினுக்கி
வேலாயுதத் தெய்வம் உண்டென்று தொட்டான்
விபூதி.

---

13. பண்டுபாடம் பண்ணு—முன்பு மனப்பாடம் செய்து பழகாத

14 கண்ட மானம்—வாயில் வந்த

15. பணத்துக்கு படியாகவிருந்தாலும் மனிதன் வயிற்றுக்கு இந்தப் பாடா?

கறிகாய் வியாபாரம்

சுளுக்குள்ள யாவாரஞ்[16] செய்திடவென்று துணிந்து
சுண்டைக்காய் முருங்கைக் காய் காட்டுமுருங்கைக் காயை
இடங்கொண்ட வேட்டியில் கட்டித் தலையிலெடுத் தான்
உலர்ந்த குடலுக்கு முசுட்டக்காய் தன்னையுருவி
ஒன்றிரண்டாகக் கடித்துவிட்டான் தொண்டைக் குள்ளே
மேல் படி தண்ணீர் குடித்து வயிற்றை மினுக்கி
மீண்டும் அவன் வள்ளியூர்க் கோட்டைக்குள் விரைந்தான்
மார்க்கமாய் வாசலை மட்டுப்படுத்தியே மல்லர்
வேட்டியைப் பீறியே ஆளுக்கொரு பிடி வாரி
பூவண்டன்மாரோடு[17] தீவட்டிக் காய்ந்துவந்து
"பொள்ளலில் கையைவிட்டு அள்ளிக்கொண்டுவா போ"
தூவிட்ட காயைப் பிரக்கி வேட்டியில் சுமந்து
"துரைமக்களோடே பறித்துக் கொண்டா" என்று சொன்னார்.
நெட்டையுருவம் போல் கேளாமல் சந்தியில் நின்றான்.
கெட்டோட பாய குன்னிக்குன்னி நடக்கின்ற நேரம்
கட்டையன் மெத்தக் கருப்பன் துரை ஆயக்காரன்[18]

---

16. யாவாரம்—வியாபாரம்

17. பூவண்டன்மார்—ஒரு காட்டுச் சாதி

18. ஆயக்காரன் – குத்தகைக்காரன்

"காட்டுவாய் சீட்டெங்கே காசெங்கே?" என்ருன்
இடும்பாய்
இடும்பா வனத்திலே சீட்டெடுத்து முத்திரை செய்து
இச்சைப் படியாய் அவரும் கொள்ளேயிட்டார்.[19]
துடர்ந்தப்படிச் செய்யாதே ஆயக்காரா வென்று
செப்ப
செவிட்டுக்கு நேரா ரெண்டு போட்டானந்தச் சீமான்
வட்டியைக் கீழே இறக்கிப் படுவாதி வாதி
வாச்சுதே யென்றந்த ஆயக்காரன் வச்சு வாங்க
பட்டினிக் காரனே இத்தனே நட்டப் படுத்தி
பண்பு கெடுக்கிருன் [தெயங்கு மகன்னு டாலப்
பாரும்][20]
என்றென்று அழுதாலுங் கேட்டார் களில்லே.
எடுத்துக் கடையிலே கூறு போட்டங்கே யிருந்தான்
பேணியே ராணுவத்தார்க்குச் சமைக்கின்ற பெண்கள்
"பிச்சைக்காரா தம்பி காசிதருவேன் பிறகு
ஆனதைக் கூட்டிக் கொதிக்கவைத் தெனடுப்பில்
அந்த தலேவாசல் கூடத்து அடையாளம்;
சீக்கிரம்வா", யென்றே யஞ்சாறு கூட்டித் திரட்டி
செப்பக் கறி வாரி போட்டுக் கொண்டப்புறம்
"தூக்கியென் காசை போடெ"ன்று கையதைத்
தொட
"தொட்டான் முலே"யதை என்றவள் தொலிந்தாடி
பரத்தைச் சிறுக்கிக்கு உபகாரியான பயல்கள்

---

19. சீட்டு முத்திரையெல்லாம் கள்ளத்தனமாகச் செய்து காட்டில் காய் பறிப்பவர்களுக்கு வரி வாங்கிக் கொண்டு கொடுப்பார்கள்.

20. [தெயங்கு......பாரும்]—பொருள்விளங்கவில்லே

பம்பைத் தலைமயிரொன்று மில்லாமல் பறித்தார்
குருக்களுரைக்கின்ற சந்தோஷ வார்த்தை குறித்தான்.
கூட்டி முடிக்கப் பத்தாமலே போச்சுதே கொண்டை,
என்றென்றுளத்தி[21] யழுதவன் பிச்சையெடுத்து
இடுப்பின் கடுப்பாறக் கிடந்தானோர் திண்ணை
யிடத்தே.

விறகு வியாபாரம்

''பன்றிக்காட்டில் போய் விறகெடுத் தின்றைக்குப்
பார்ப்போம்.
பச்சிலையும் காயும் தின்று தணித்தான் பசியை
உச்சிக்காலம் விட்டு சாயுங்காலமே வந்தான்
கோட்டையூரில்
வச்சிரமாயொட்டி வாசல் கடந்து வருங்கால்
மலைக்குத்துக்காரப் பயல்கள்[22] விறகை மறித்தார்.

வேறு

''எங்கடா கொண்டு போறாய் விறகுதான்
இறக்கடா'' என்றுருக்கி அதட்டினான்
உங்கள் பங்கல்ல எனக் குலசேகரன்
உள்ள கிராமத்தில் போறவிற கென்றான்
நாங்களும் வனவீட்டுப்பய லென்றே
நாலு ரெண்டு கொள் கைக்கு[23] மாறினான்.
பாங்கில் நின்ற வழிநடை முண்டச்சி,
''பறிக்கப் போனார் விறகு இங்கே கொண்டுவா
சோறு கஞ்சி வயிற்றுக்குத் தாரேன் நான்

---

21. உளத்தி—புலம்பி
22. குத்துக்காரன்—குத்தகைக்காரர்கள்
23 கொள்கை—கைகொள்ளும் அளவு

சுமக்கும் கூலியும் கூடத் தருகிறேன்''
கூறு போட்ட விறகி லோர் பங்கிதை
கொண்டு போய் விற்ருன் அவள் வீட்டில்
விறகை வீட்டுக்குள் ஆக்கி வெளிக் கொண்டு
வீதியில் சென் று உலாவித் திரிகிருள்
''உண் ணச் சோறும் தருகிறே னென்றந்த
வித்துப் போட்ட இடந்தனில் கூலியைப்
போடெ''ன் ருன்.
''கண் ணுக்குத் தெரியாதோர் அடையாளம்
கண்ட பேரெல்லாம் காசு தருவாரோ''
வீட்டுக் காரியைக் கூப்பிட்டுக் கொண்டாள்
''விருந்துக் காரியை ஏண்டா யலட்டிருய்
திருட்டுக்காரன் விறகு கொடுப்பாளு!
செம்புக் காசு தேடித் திரிவாளு!
பெண்களோட உனக் கென்னடா பேச்சு
பெரிய பட்டாணியைக் கூப்பிடுங்க பிள்ளா!
கண் ணு மூக்குச் சிமிட்டுருன் பாருங்கோ.
கயறு கொண்டுவா கள்ளனைக் கட்டெ''ன் ருள்.
போதுமே போதுமென் றயல் போயினுன்
வைத்துப் போன விறகை அங்கவர்
வாரிக்கொண்டு மறையப் போனுர்களே.

யாரிடம் முறையிடுவான்?

''மந்திரிமார்கள் வாசல் பிரதானிகள்
மன்றில் அம்பலகாரத் துரைமக்கள்[24]
தந்திரச் சொல் கண்டு கொள்ளாச் சேவகர்
கூறுவ பேருக்கும் அறிய முறையிட்டால்

---

24 துரைமக்கள்—அதிகாரிகள்

மேனியின் மினுக் கொன் றில்லையா மாகில்
வேடிக்கை சொன்னாலும் வீணுக்குக் கேளாதே.[25]
ஊனமுள்ள பெரும்பசி தீர்ந்திட
ஓட்டிலே பிச்சை உதட்டுக்குப் பத்தாது.
வீணிலே பேச்சு கேள்க்க விதித்துதே
மேனியெல்லாம் விதன முண்டாச்சுதே
ஊணுமில்லையே உறக்க முமில்லையே
ஊருக்கெல்லாம் நாடும் ஒருத்தனைக் கண்டுதே.''[26]
என்று இலைவாணிச்சி[27] திண்ணை ஏறினான்.

தாய்போல் ஒருத்தி

நொந்த சத்தத்தைக் கேட்டிலை வாணிச்சி
''நோக்காட்டுக் காரன் யாரெ''⊗ன்று கேட்டனள்
''காடு தேடி விறகு சுமந்திட்டேன்.
காசு காணாத பாவியாய்ப் போயினேன்
மாடு கட்டி உழுகின்ற பேர் மத்த
வைக்கோல் போட மறுத்துக் காவான்
பட்டினியாப் பத்துக் காசும் தொட்டு
பத்தெட்டு நாளாச்சுதெ''ன்றான்.
கட்டிச் சோறுக்குள் கருவாட்டையும்
கட்டினாள், ஊட்டினாள் தொண்டை மட்டும்
பெத்ததாய்ச் செத்துப் போய் பிறந்தாளென்றே
பேச்சு மூச்சு விடாமல் விழுங்கினான்.

---

25 மேற் கூறியது : வழக்கு மன்றத்தில் ஏழை சொல்லுக்கு மதிப்பு இராது; என்பது அவன் கூற்று.

26 ஊருக்கும் நாட்டுக்கும் நான் ஒருவன்தானா அகப்பட்டேன்?

27 நெல்லை மாவட்டத்தில் கொடிக்கால் விவசாயிகள் இலை வாணியர் எனப்படுவர்.

⊗ நோக்காடு—சீக்கு.

சுத்தமாய்ப் பசிப் பேய்க் குணம் விட்டபின்
தூக்கம் பெயர்ந்து மேல் பட்டி[28] தொட்டதாம்.
கோழி கூவக் கிழவியைக் கூப்பிட்டு
கும்பிட்டான் "காட்டில் போய் வருவேன்" என்ருன்
வடிகஞ்சி சாதமும் வார்க்க வார்க்க குடித்தானே மாடு போல்
பேணிப் பாக்கு வெட்டருவாள் ஒன்று
பின்பு வாங்கிப் புறங் கொண்டு போயினுன்.

விறகுக் கூலி

"வாணிச்சி வாழ்வு குன்ருமல் காத்தருள்
வள்ளியூர்த் தெய்வமே" என்று கும்பிட்டான்.
வாய்க்குள் பாக்குப் போட்டுக் கொண்டோடினுன்.
மதி கெட்டான் பாட்டுப பாடிக் கொண்டோடினுன்
"அடித்துக் கொல்லாமல் கஞ்சி தந்தீரெ"ன்ருன்
கத்தி கொண்டு விறகுகளை வெட்டியே
கட்டிக் கொண்டவள் கொல்லையில் சாத்தினுன்.
மத்தியானம் ஒரு கட்டு சாத்தினுன்;
மாலை நேரம் ஒரு கட்டு சாத்தினுன்;
மீண்டும் மீண்டும் போய் ரெண்டு நாள்க்குள்ளே
விறகுக் காடாக்கினுனவள் வீட்டையே.
கடன் கொண்டு ஒரு நாள் விறகு கொண்டு வந்தே
குத்தியை[29] தச்சன் வீட்டில் கொடுத்தனன்.
"வங்கிசத்[30] தவர் வணங்கிடும் ஊர்த் தெய்வம்

28. கூரை அதிரும்படி குறட்டை விட்டான்.

29. குத்தி—பருமனை மரத்துண்டு.

30. வங்கிசத்தவர்—வமிசத்தவர்.

வள்ளியூரை வலஞ் சுத்தியாடுது
அங்குமிங்கும் பிழைக்க வொட்டாமல்
அடித்தடித்துக் குதிக்குதே தச்சனே
வீசி வீசிக் குதித்துக் கொண்டாடவே
வெண்டயத்தடி குத்தியுண்டாக்குவாய்
கூசிடாமல் சமை'' என்று சொல்லியே[31]
கொண்டு வந்தான் விறகவள் வீட்டுக்கு
விறகு வாணிச்சி வித்து முடிகிருள்
விருந்துக் காரனைப் போலவன் சாப்பிட்டான்,
இறுதியாக ஒரு நாளை வேளையில்
ஊரும் பேரும் உரையென்று கேட்டனன்.

தன் வரலாறு கூறுகிருன்

வேறு

''வெமனூரம்பலத்தில்
வீற்றிருந்த கரையாளர்
கண்டிடாத ஆத்திக்குட்டி
பெரிய பணக்காரனவன்
பூமாலை மனையாட்டி
புத்திரனில்லா திருந்தாள்
தவசி பண்ணு மவளிடத்தில்
சந்ததியாய் நான் பிறந்தேன்
இவன் எங்கள் தேவனென
ஈன்றவர்கள் பெருமைப் பட்டார்.

---

31. ''ஊர்ப்பிசாசு சுற்றியாடுவதைப் போக்கிச் சமாதான மடையச் செய்ய ஊர்க் கொடை கொடுக்கவேண்டும்.வம்ச தெய்வத் திற்குக் கொடுக்கும் கொடையில் நான் பொந்தந்தடி எடுத்து ஆட வண்டும்.'' என்பது கருத்து.

தவழ்ந்து விளையாடுமுன்னே
தகப்பனூர் தீப்புகுந்தார்
கூண்ட முலைப் பாலூட்டி
கொண்டு திரிந்தே வளர்த்தார்
பால் குடி மாறின பின்
பாவையரும் போய்க் களைத்தாள்
ஏலவே பணத்தை யெல்லாம்
எதிரி பறித்துக் கொண்டான்.
வைது வைது சோறு தந்தால்
மடநாய்போல் கிடந்து கொள்வேன்.
மெய் துவள அரையாட்கு[32]
வேலை செய்யும் பக்குவத்தில்
பணம் பறித்த எதிராளி
பருவிலங்கில் இட்டனனே
எட்டு நாள் கிடந்துவிட்டேன்.
அள்ளியள்ளித் தருவதற்கு
ஆணுமில்லை பெண்ணுமில்லை.
வள்ளியூர்க் குமரனை நான்
மறக்காமல் நினைத்திருந்தேன்
நினைத்திருந்தபடி தானோ
நெறி விலங்கு தெறித்ததம்மா.
வன் துணையாய்க் காத்திருந்த
மறவரையும் கடந்து விட்டு
கருத்துடனே காவல் விட்டுக்
கடந்தோடி வரும் போது
சுரைக் கூடு தாரு மென்று
தொழுதேன் நான் குருக்கள் தன்னை.

---

32. அரையாட்கு—அரையாள் வேலை—குழந்தைகளுக்குப் பாதிச் சம்பளம். அரையாள் கூலி என்பர்.

சாத்திரத்தை பார்த்தவனும்
தர மாட்டேனென்று சொன்னான்.
கூத்தி மக்கள்[33] வீத்திருக்கும்
கோட்டையில் வந்தளவே
விறகு வித்துக் காய்பறித்து
வித்த தெல்லாம் பறித்தார்கள்
அறுதலிக்குப் பிறந்த மக்கள்[34]
அப்பனும் நீ, அம்மையும் நீ
ஆறுமுக தெய்வமும் நீ
எப்படியும் காத்தருள் வாய்''
என்றுரைத்துப் பின்பு சொல்வான்
விருப்பமுட னப்போ தான்
''வீணாதி வீணனம்மா
வருத்த மெல்லா மறிந்தவளே
மாதாவே'' என்றுரைத்தான்.

உடையளித்தாள்

வேறு

கட்டுப் பெட்டியவிழ்த்துத் துப்பட்டி கொடுத்தாள்.
காதுக்குத் தங்கக் கடுக்கனையும் போட்டாள்
தொட்ட சுவடாக முத்துப் பருப்பாகக் கடுக்கனிட்டு
சுந்தரச் சிவப்புடைய சந்திரகாவி கட்டி
சந்தனப் பொட்டுக்கு மேலே சிந்தூரப் பொட்டிட்டு
தஞ்சாவூர் பட்டுக் கயிறு அஞ்சாறு தூக்கி
கொழுந்து பிச்சிப்பூ கொழுந்து கொண்டை குலம் மணக்க
கோலஞ் செய்து புலிக்குட்டி வாலுருவி விட்டனள்.

33, 34. எரிச்சலில் வரும் ஏச்சு

வில்லேச் செருப்பு அஞ்சு பணம், வேட்டியோ வராகன்
வெத்திலேயுங் கையுமாக வீதியிலே சென்ருன்.
கொல்லேக் குள்ளே நின்று பெண்கள் கூடிக்கூடிப்
பார்ப்பார்
கோவலனே வள்ளியூர்க்குச் சீவகனே யென்பாள்
வச்சிரமாய் சீக்கிரத்தில் தச்சன் வீட்டில் சென்று
வந்து நின்று சாதிலிங்கம் பொந்தித்தடி கேட்டான்
குச்சுப் போட்ட வெண்டயக் குடக்கிலுக்குப் போட்டு
கொண்டுதிரி வீமதண்ட மென்றவன் கொடுத்தான்.
வள்ளியூரில் கந்தப்பனே மெள்ளவே நினேந்து
வந்து புகுந்தான் சந்தியி டமாக.

குலசேகரனே வீதியில் காணல்

கள்ள பத்தார் கொத்தருடி கொள்ளே ராணுவத்தார்
கம்பளத்தார் நித்தம் பத்து சம்பளத்தார் கூட்டம்
க்ஷத்திரியர் கூட்டம் ராஜபுத்திரருங் கூட்டம்
சட்டையிட்டுச் கூச்சலிடும் பட்டாணிகள் கூட்டம்
தத்தி தத்தியாக நின்ற பத்தியில் புகுந்தார்
தந்திரஞ் சொல் மந்திரிமேல் பொந்தித் தடிபாய
முட்டுக்காரர் நட்டுவர்கள் தட்டுப்பட்டு வீழ
மூர்க்க கோலங் கொண்டு புலி தாக்குவது போல
தட்டிக் கேட்டிடாத சில கெட்டிக்காரர் தன்னே
தாங்கி எடுத்தப் புரத்தில் வாங்கிப் போகச் சொல்
வான்
கப்பங் கொண்டு வந்தவர்கள் கணக்குச் சொல்ல
வந்தார்,
காரியக்காரர், மணியக்காரர் மந்திரிமார்கள்
அப்புறமும் இப்புறமாக்கி நடுவே போய்
"ஆண்டவனே குலசேகரா" வென்று கும்பிட்டானே
தென் மதுரைப் பாண்டியர் குலசேகரப் பெருமாள்

திண்ணமுள்ள காளிங்கனுய்ப் தாயக்காணும்
என்னை நினைந்தானரசன் முன்னுந்தடி வீணன்
எட்டுப் பத்து நாளாய்த் துசம் கட்டித் தொழுதானே

குடக்காசு வாங்க முடிவு

அன்று போலவே காளிங்கன் முன் சென்று முகங்
காட்ட
அன்னங் குல சேகரனுய் பண்ணினதாய்க் காணும்
என்றிவர் குறித்துக் கொள்ள வீணுதிவீணன்
என்ற பேர் கொழுந்து விட்டுச் சென்று தென்
திசைக்கும்
சாதி கேள்க்கவில்லை யூருங் கேட்கவில்லை
பார்த்து குடக் காசுக்கு யுத்தாரங் கேட்பதென்ன?
பாண்டியன் முகத்தில் சிரிப்பாணியொன்று போதும்
கைத்தடியுந் தந்து பாண்டி கொற்றவன் கற்பித்தான்.

வெற்றிலைக்கு வரி

காசு வேண்டுமென்றவன் கடையில் சென்று நின்ருன்
வெத்திலைக் காடிக்குக் காசு வேணுமென்ருன்.
மேலும் பாக்குப் பைக்கறைக்கு வேண்டுவையோ காசு
கடைத்தலையில் விறகு வித்துக் கிடைத்த தில்லைக்
காரனன்றே
கைத்தடியுங் கையுமாகச் சுத்திப் பார்க்க வந்தாய்
அடித்துப் போட்ட பாம்பு வந்து கடித்திடுமோ
பெண்கள்
அதட்டுகிருளென்று முன்னே யுதட்டிலிடி போட்டான்.
ஆ கெடுவாய் என்கு முன்னே தாடியில் கை போட்டான்
ஆண்டவனே! காளிங்கனே! பாண்டியனே கூகூ
கா கூ வென்றிருமுன் போகவே மறித்தான்

கள்ளக் கோ லென்றவன் தன் வெள்ளிக் கோல்
முறித்தான்
பொட்டுக் குலேந்தே வெத்திலேக் கட்டுக் குலேந்தாச்சு
போகப் போக மிதிபட்டுச் சாகப் போறீரென்ருன்
கட்டிக் கொண்டு மன்ருடி கிட்ட நின்ற பேர்கள்
கச்சக் காலடித் திட்டாலும் வைச்சக் காசு சுடுமா?
''பேசியந்தக் கூட்டத்தார்கள் கஞ்சி வாங்கிக்
கொடுத்தாள்
பொரளிக் கிணத்தங்கரை யோரம் பிடித்தே சென்ருன்.

குடக்காசு வசூல் ஆரம்பம்

பாசமுடனப் பெண்களேப் பார்த்தவன்
''படிக் கல்லிலே வைத்திடுங்கோ குடந்துக் கொருகாசு''
பாண்டியன் மேலாணேயிட்டால் தோண்டி போடப்
போமா?
பட்டுச் சட்டைக் காரனேத் தட்டிப் பேசப்போமா?''[33]
வேண்டு வாளுே காசெனவே கூண்டுப் பெண்கள் நிற்க
மேலுங் குடங் கொண்டு வந்தாள் காளிங்கன்
வெள்ளாட்டி
குடந் தனேயு மிறக்கி வைத்து நடந்த செய்தி கேட்டாள்
''கோட்டிக்காரன் பேச்சல்லாமல் சீட்டுக் கேட்ட
துண்டோ.
விடிந்து போச்சு தென்ருே காசு முடிந்து போக வந்தாய்
வேண்ட மாட்டானென்டி பெண்கா, தோண்டிப் போடு
மென்ருள்
துட்டுத் தடியை அசைத்துக் கிட்ட வந்து நின்று
''சூரத்தனமாய் பேசிஞயே கோதிக் கொள்ளுவாயோ!
(என்ருன்)

---

33 பாண்டியன் ஆணேயென்று சொல்லி குடத்துக்கொரு காசு வரி கேட்கிருன்.

குட்டச்சி சொல் கேட்டால் குடம் கொண்டுபோக
மாட்டீர்
கொள்ளக் குறையாக்க வந்த சூர்ப்பனகை"யென்றான்
மட்டச்சிகள் காலில் மிதிபட்ட கொண்டைக்காரன்
"வாரியலைப் போலப் பரந்த மீசைதன்னைப் பாரும்
காவிப் பாக்குப் போட்டுக் கொண்டான் சோவிப் பல்லுக்
காரன்
காளிக்குப் பலி கொடுங்கோ மூளிக் கிடாய்தன்னை
வாவிக் கரைப் பெண்களை சேவிக்கவோ வந்தாய்
மாப்பிள்ளைக்கு ஆகுவாயோ பேய்ப்பரச்சி மகனே
நாட்டிலே குடக்காசு வாங்கும் பெட்டைப் பிணமே நீ
நாய்க்கும் பேய்க்கும் வள்ளியூரில் மூப்பு வந்து
போச்சோ?
ஊட்டி தெறிக்க கிணத்துக்குள்ளே தள்ளிப் போட்டு
உண்டைக் கல்லைத் தானெடுத்து மண்டையில்
போடெ"ன்றாள்.
"கழுத்துக் கட்டி தானில்லாம கொழுத்துதே கிடாரி
கள்ளக்காளையோடு மேய்ந்து துள்ளிக் கொள்ளலாச்சே
மழுப்பியந்தக் காளிங்கனை பிணைத்திடாமல் பாயும்
மாடு தனக்குத் தடியால் சூடு போட வேணும்"
"தாடகைக் கோலஞ் சமைந்து நாடகத்தைச் செய்தால்
தம் திம் மென்று கொட்டுதற்கு மத்தளமேயில்லை.
பாடும் பாட்டுக் கேட்டுத் தலையாடும் தெய்வமில்லை.
பரத்தை யென்று சொல்லியுன்னை சிரிக்கப் போறார்
பெண்கள்
கொத்துக் காரனுங்கள் வீட்டுச் சொத்தை விலையாக
கொள்ளும்போது பெண்கள் கூடித் தள்ளுவாரு
முண்டோ
புத்திக் காரியாகிக் காசை வைத்துப் போ"வென்றானே

காளிங்கனது வேலைக்காரிக்கும் வீணுதி வீணனுக்கும் வாக்கு வாதம்

"பூச்சியங் கெடுப்பேன் வீட்டில் போய்த் திரும்பு
முன்னே
என் கையாலே வெட்டியுன்னை வன் கழுவிலிட்டு
ரத்தப் பொட்டுப் போடுவேனென்று நீரைக் கோரி
தன் குடத்தைக் கோரியவளோ கரையில் வைக்க
தந்திரமாய்க் குடத்தைத் தடி பொந்தி கொண்டு
போட்டான்.

குடமுடைந்தது

வேறு

பொந்தித் தடிபட்டு குடமுடைந்து
புனைந்த கோய தகந்தான் குலைந்து
சிந்திக் குடமோடு[34] தன்னை யெடுத்து
திரண்டு பெண்கள் முறையிட்டாளாம்.
கிந்தி இடுப்புக்கு நோக்காடென்றே
கெடுதி யோட்டினைத் தலையில் வைத்து
கா கூ வென்பார்கள் சில பெண்கள் தான்
வையத் தொடுத்தாரே சில பெண்கள்தான்

காளிங்கனிடம் முறையிடல்

கடிதாக் காளிங்கன் முன்னே சென்று
கண்ணீரொழுகவே அவயமென்பார்
ஒருவாயிருந்ததோர் துரைமக்கள்தான்
நடந்த செய்தியைக் கேட்டிருந்தார்.
எல்லாச் செய்தியும் கேட்டிருந்தார்
நேரெடுத்துப் புகன்றனே காளிங்கனும்
"பொல்லாப்புழுக்கச்சி தவக்குறையால்
புத்திக்குறைவந்து கண்டதுகாண்.

---

34. குடமோடு—உடைந்த குடத்தின் ஓடு

பார்த்தாலொரு செம்புக் காசாலே
பண்ணைக் கெடுத்தாளே பழிகாரி
ஆர்த்தங்கழுது அடிபட்டாலும்
அரசன் கற்பனை[35] அழிக்கப்போமோ?
குடிக்கத் தண்ணீர் வேண்டுமென்றால்
குடத்துக்கு ஒரு காசு கொடுப்பாயெ''ன்றான்
இடுப்பு நோக்காடு தான் போச்சு.
இரங்கியழுதிடுங் குரல் போச்சு.
படித்துக் கொடு வந்த பிரட்டும் உருட்டும்
பிரிந்துபோச்சு பாவையர் குடுமி.
பிடித்துத்தாங்கியே யெடுத்து வந்த
பெண்கள் கூட்டமும் பிரிந்தார்கள்.
மூத்த மந்திரி காசெனவே[36]
முந்தக் கொடுத்தவர் கோரிப் போனாள்
''தோத்துப் போனாரே பெண்களெ''ன்று
துட்டுத்துடிக்காரன் வித்துக்கொண்டான்

தண்டல்காரர் நியமனம்

வள்ளியூர்க்கொரு மணியத்தண்டல்
மத்தனாட்டுக்கும் மணியத்தண்டல்
கள்ளநாடு திருச்சிராப்பள்ளி
காஞ்சிபுரம் மட்டும் மணியத்தண்டல்
ஒருநாளைத் தண்டலுக்கு ஒரு பட்டரை
உள்ள குடக்காசு கூடியதாம்
விரியாம் போற காசு வெள்ளிக்காசு
வேண்டியீ நிலவறை தோண்டிப்போட்டான்
வீணாதி வீணன் குடக்காசுக்கு
வேந்தன் இறைகூலி பற்றாது

35. கற்பனை--கட்டளை (நாஞ்சிநாட்டு வழக்கு)
36. மூத்த மந்திரி காளிங்கன் விதித்த வரி

மாளிகை கட்டினன்

காஞ்சகருமலை மரத்தை வெட்டி
கல்லுமாளிகைதான் சமைத்தான்
கூடஞ்சாவடி காசுப்புரை
கோட்டை வாசல் முகப்பு கண்டான்
பாடும் புலவர்க்கும் பிராமணர்க்கும்
பாலுக்காயிரம் பசுக் கொடுத்தான்.
மீண்டு காளிங்கனறிய வென்றே
வெள்ளிக் கதவொன்று சமைக்கச் சொன்னன்
பாண்டிய ராசாக்களறியவென்றே
பவளத் தூண்களும் நிறுத்துவானும்.
நாட்டிலிருப்பவர் அறிய வென்றே
நாளிகை மணி தூக்குவனும்
கொடுத்த பணத்துக்கு வட்டி வாங்கி
குதிரை இருபதுங் கட்டிக் கொண்டான்.
விடுத்த பொரந்திலி காங்கிலியர்
வெள்ளித் தடிக்காரர் நூறு பேரும்
"வேந்தன் சேவகர் இடும்பு செய்தால்
விலங்கில் போடுவேன் வெகு காலம்"

வீணுதி வீணன் பெருவாழ்வு

சாந்த குணத்துக்கு சமத்துக்காரன்
தடியால் கொடுக்கவும் சமத்துக்காரன்
மேல வெம்பனூர் கரையாளர்கள்
வீட்டில் கலியாணம் முடித்துக் கொண்டான்.
மேலும் சோறிட்ட இலை வாணிச்சி
வீட்டைக் கல்வீடாய்க் கட்டி வைத்தான்.
மூத்த மந்திரி வெள்ளாட்டியை

முடிவாங்கி ஆனந்த லெக்ஷ்மி[37] என்பான்
கூத்துக்கு இருக்கிற சலுகைப் பெண்கள்
குடலைப் பிடுங்கியே விரட்டிடுவான்.
இரந்து திரிவாரை வேலை கொண்டு
லட்சம் பணக்காரனாக்கி வைப்பான்.
பார்க்கும் திசைதோறும் சுமை சுமையாய்
பணங்கள் தான் வந்து குவிந்திடுமாம்.
புல்லுப் பறிப்பார்க்குக் கேள்வியுண்டு
பொருளைப் பறிப்பார்க்குக் கேள்வியில்லை,[38]
செல்வ பாண்டிய னறிவதற்காய்
செய்யாத தொழில் செய்ய வேணுமென்றான்.

மணத்துக்கும் மரணத்திற்கும் வரி

காஞ்சிபுரத்துக்கும் தென் குமரிக்கும்
கையில் பணமஞ்சு கல்யாணத்தில்
வாஞ்சையாய்க் கேட்டு வாங்கவென்றே
வலது தோளில் தடி யெடுத்தான்.

மணப்பந்தலில் குழப்பம்

வேறு

அன்றைக்குத்தான் வள்ளியூர்க்குள்ளே கலியாணம்
அரண்மனை ராணுவத்தாரோடே சேர்வைக் கதிபன்

37. முடியை வெட்டி மொட்டையாக்கி அவளை ஆனந்தலட்சுமி என்று பெயரிட்டுக் கூப்பிட்டான்.

38. நாட்டு ஆட்சிமுறையைக் கேலி செய்கிறார். புல்லுப் பறித்தால் வரி கேட்கும் அரசாங்கம் கொள்ளையடிப்பவரைத் தடுக்கவில்லையாம்.

மூன்றிலே காவனப் பந்தல் சடங்கு முடித்து
முரியிடமான தாரைகள் பேரிகைகள் முழங்க
மாப்பிள்ளையருகே பெண்ணைப் பலகையில் வைத்து
மங்கலஞ் செய்திடும் பந்தலில் வீணனும் வந்தான்.
கூப்பிட்டுப் பொந்தித்தடியதைச் சுத்தி
''கொற்றவன் கற்பித்தான் அஞ்சி பணந்தாரு
மெ''ன்ருன்
காப்புலி[39] போலவன் மாமன் சமுதாட்டுக்காரன்
''காட்டில் பறியாமல்[40] வீட்டிலும் வந்தானே கள்ளன்.
குடக்காசு ஆதாயம் போதாதென்றே கொட்டி
கொண்டான்
கோட்டையில் ராணுவத்தார்க்குமுண்டோ[41] இந்தக்
கொள்ளை
கடத்தி சமுசாரி வீட்டிலுன் கூத்தைப் போய்க் காட்டு
கத்திக்கு அவர் வரி[42] வைத்திடுவாரென்றே கண்டாய்?
நட்டமாய் காளிங்கன் வெள்ளாட்டியல்லோ நாங்கள்
நாட்டுக்குள் கோட்டைக்குள் எங்கள் வழக்கோ நடக்கும்
தாட்டிமை பேசினுல் வெட்டுங்க வந்திடும் வேண்டாம்''
வீறுடன் பேசி நூறெண்பது பேர்கள் வெகுண்டார்
கத்திக் காரளவர் வித்தாரமாய் நீட்டுங் கையில்
கைத்தடி கொண்டடித்தான் கீழே விழுந்து தேகத்தில்
சுத்தி வளைந்திடும் மாகுத்தன் மாரைத் துரத்தி
தாக்கிக் கீழே போட்டுக் காண்பவராய் போலேது
கைத்திறன்

---

39. காப்புலி-- காப்பிரி-- நாகரிகமற்றவன்

40. பறி-- கொள்ளையடித்தல்

41. ராணுவத்தார் குடும்பத்தில் நடக்கும் மணத்திற்குமா இந்தக் கொள்ளை வரி.

42. ராணுவத்தார் கத்திக்கும் இனி வரி உண்டோ?

இந்த ஊர்ப்பட்டன் சாட்சி சொல்ல நின்ருனென்றே
ஏழெட்டு வெள்ளித் தடிக்காரரும் மாரிலிடித்தாரே
கந்தை வெளுக்கின்ற வண்ணுனுடன் சண்டைக்காரன்
காணுமலே கோழிக் கூட்டுக்குள்ளே சென்று கலந்தான்
பெண்ணுக் கிருந்தவள் கொண்டை குலேந்திடக் கண்டு
பேய்ப் பயல் மாப்பிள்ளே[43] கையை விட்டோடிப்
பிழைத்தான்
கண்ணுள முப்பான் காரியக்காரர்கள் கண்டு
கலகம் பண்ண வேண்டாமென்று பிடித்தார்களே
கையை
கைப்பணம் அஞ்சும் வெத்திலேயுங் கொட்டைப்
பாக்கும்
படியுங் கொடுத்து வாங்கிப் பயணப்படுத்தி
அய்யாவுத்தாரம் ஓர் கூர் எழுதி அனுப்பி
அட்ட திசைக்கும் நடக்குதே வீணன் கதை

சாவுக்கஞ்சுபணம்

சுடுகாட்டில் கலகம்

சாவுக் கஞ்சு பணம் வாங்கிட வென்று சமைந்தான்
சன்ருசித் தெய்வமாய்ப் போனுரோ பாண்டிய ராசாக்கள்
பாவாடைக்குள்ளே சுமந்த பிணந்தன்னேப் பார்த்து
பாரத்தடியோடு சென்ருன் சுடலேப் பரப்பில்
''செத்தவர்க் கஞ்சு பணமென்றே யுத்தாரஞ் செய்தான்
சீக்கிரந் தந்து அனுப்புங்கோ'' வென்றே யுரைத்தான்
புத்தித் துரைமக்கள் பல்லக்கு காவித் திரியும்

43. ஆபத்துக்காலத்தில் மனேவியைக் கைவிட்டுத் தான் பிழைக்க ஓடும் மாப்பிள்ளேயைக் கேலி செய்கிருர்.

"பூவண்டன் மாரைத் துடருமோ உன் அண்டப்
பொய்தான்
மாட்டாத பேருக்குச் செல்வத்தைத் தெய்வம் வகுத்தால்
மயான பிணம் தந்திடு மென்றுக்கால் வாங்கு
கொட்டாலேக் காரா நீ போ''வென்று கோபித்து
''கொட்டிக் கறவாமல் கொச்சைப் பசு பால்
கொடாதோ!'' (என்று)
கீமந்துக் கட்டையைப் போலவொண்ணுய் எறிந்தால்
எல்லே சுழன்றிடுங் கொள்ளிக் குடத்திடி
செம்பரைப் பயல் செண்டைச் சாவையுந்[44] தீர்த்தான்
தீச்சட்டிக் காரனே ஒளிந்தானே கீத்தனுஞ் செடிக்குள்
கொண்டைச் சனங்களே சூரைச் செடிக்குள் மடக்கி
குப்பைக் கழுதைபோல பூவண்டன்மாரைக் குமைத்தான்
அண்டையில் நின்றோர்கள் சண்டை வராமலமர்த்தி
''அடித்துப் பறித்தான் கலியாணத்தில் பணமஞ்சும்
வள்ளியூர்ப் பாண்டியன் குலசேகரன் சொன்னவரி
மலேயைப் பிடுங்கும் பணத்தைப் பிடுங்க மாட்டார்கள்
துள்ளாமல் காசைக் கொடுத்துப் பிணத்தைச் சுடுங்கோ
தோதகக் கூத்தாட வேண்டாமெ''ன்றெல்லோரும்
சொன்னர்
''அறியாமல் செய்த பிழையைப் பொறுத்துக்
கொள்ளப்பா'' (என்று)
அஞ்சு பணம் கொடுத்து வழி விட்டனுப்பி
சேரியுந் திரளோடே வீணனும் வீட்டிலே சென்று
தேசத்துக்கெல்லா மெழுதி விட்டானந்தச் செய்தி
மண்டலந்தானெல்லாம் வீணுதி வீணன் மணியும்

வீணுதி வீணன் அதிகாரம்

மலே கடலுள்ள அரசர்க்கெல்லாம் குத்தகை வைத்தான்
தண்டல் கடமையும் ஆயமும்[45] கோவில் தலமும்

44. கெண்டை - மலேயாள நாட்டில் இருக்கும் ஒரு மேளம்.
45. ஆயம்—வரிவிதிக்கும் அதிகாரம்.

சருவ விசாரிப்பும்[46] வீரணுதி வீணன் தனக்கே
நாட்டுக்குப் பாண்டியனுக் கினை[47]யென்று நடக்கும்
நாலு திசைக்கு மோர் வர்த்தகனுய் நடந்தான்
காட்டில் பறித்தாலுங் கேள்விகளில்லாத காலம்
காரியக்கா ரருடனே சமத்தனிருந்தான்.

குலசேகரன் நாடு சோதனை

வேறு

கள்ளர் தனைக் கண்டால் கொல்லப் போமோ?
கடுவாய் புலியன்றி கொல்லப் போமோ?
உள்ளபடி யன்றி ஒளிக்கப் போமோ?
யுத்தாரமன்றி நடத்தப் போமோ?
பயிரை யழிக்கின்ற யானை பன்றி
வயிரக் கலிபோன்று அழித்தவனை
வைத்துச் சுடுகல்லால் கொல்ல வேணும்.
புத்திப் பெரியோர்க்குப் பிழைகள் செய்தால்
பொசிப்புக் கொடுத்ததை யறுக்க வேணும்
எத்தும் பல பொய்யு மிருப்பவர்கள்
ஈசன் பூசையை நடத்த வேணும்.
கோவிலுடமையைக் கொள்ளையிட்டால்
குமரி வடகாசி காண வேணும்
வாவிக் கிணறு தூர்த்தவர்கள்
வழியில் மடங்கட்டிப் பாரக்க வேணும்
மங்கிலிய மில்லாதவளைத் தொட்டால்
வாணுள் குறைந்து போமவர்களுக்கு

---

46. சருவ விசாரிப்பு—மேல் விசாரணை அதிகாரம் (Supervision)

47. பாண்டியனுக்கினை—வீரணுதி வீணனது ஆட்சிதான் பாண்டியனது பெயரால் நடந்தது.

பங்கமாய்க் கெற்ப மளித்தவர்கள்
பண்ணும் புண்ணியம் பாவமாமே.
இந்தப் படியுள்ள யுலக நீதி[48]
எவர்க்கு மறிவித்துப் பறை சாத்தினனே,
"அந்தப் பறைக்குள் [49]நடக்கின்றதோ?
அதன விதனமாய்[50] நடக்கின்றதோ?
கோட்டைதனைச் சுற்றிப் பார்க்க வேணும்
கூட வா திரு நீல கண்டா!" (என்று)
நீட்டக் கருங்கச்சைக் கருங் குல்லாவும்
நெடிய மந்திரவாள் கேடகமும்
பிடித்துக் கரியானை வலஞ்சுத்தியே
பெருகுதுரை மக்களறியாமலே
இடத்துப் பதுங்கியே இருளிலவர்
எதிரே வருகின்ற கிழவி சொல்வாள்

வரிகள் பற்றிக் குலசேகரன் அறிதல்

"குடக்காசு வைத்துக் குலசேகரன்
கொடிய பாவஞ் சுமந்து கொண்டான்
நடக்குங் கொடுமையால் குலசேகரன்
நாட்டிலிருந்திட மாட்டானென்றான்
கேட்டுத் திருநீலக ஒட்டன்" கிழவியுரைத்ததைக்
கேளுமென்றான்.
இட்ட முடனேடிச் சென்றே

---

48. உலகநீதி—நாட்டு நீதிமுறைமைகளை மேற்கண்ட 20 வரிகள் கூறுகின்றன. இவற்றை நிலைநிறுத்துவது அரசன் கடமை.

49. அந்தப் பறைக்குள் =பறையறிவித்தபடி உலகம் நீதி வழுவாமல் நடக்கிறதா?

50. அதனவிதனம்—(நெல்லை மாவட்ட வழக்கு) கூடுதல் - குறைவு.

''இந்த ஊர் பேரை யெனக்குச் சொல்வாய்'' (என்ருன்)
''வள்ளியூர் என்று சொல்வார் பலர்'' (என்ருள்)
''வழியைக் காட்டித்தா கிழவி''யென்ருன்
துள்ளும் நடையோட பழக்கமிட்டு
சொன்ன மொழிதன்னைச் சொல்லுகிருள்
மறந்து போயிப்போ நினைத்துக் கொண்டேன்
''வள்ளியூர்ப் பாண்டியன் குலசேகரன்
இறந்து போவாஞே! இருப்பாஞே!
எடுத்தான் குடத்துக்கோர் காசெ''ன்ருள்,
பாண்டியனதைக் கேட்டுக்கொண்டு!

புலம்பல் கேட்டான்

பல வேலைக்காரர் தெருவில் வந்தான்.
பூண்ட பிணியாலே ஒருத்தி வீட்டில்
புருசன் செத்துப் போய் அவள் அழுதாள்
''கிளையு மென்னுட னிருந்தாரில்லையே!
கேட்டா லொரு காசு தருவாரில்லை
குழிக்குள் போட்டுப் புதைத்தாலுங்
கூடச் சுமப்பதற்காருமில்லை!
பாட்டில் கிடப்பானைக் காட்டிலிட
பச்சரிசியுங் கிடையாதே!
வீட்டைப் பிடுங்கியே விறகிட்டாலும்
வீணுதி வீணன் விடுவாஞே?
மெழுகு தாலி மேல் பொன்னிருந்தால்
வித்துப் பணமஞ்சு கொடுக்கலாமே
ஒழுகு வள்ளியூர்க் குமரப்பனே
உனக்கே அபயமென்ற''ழுதனளே.
அழுகுரல் கேட்டுப் பாண்டிய மன்னன்
அருகு சிறுக்கனை[51] முக நோக்கி

51. சிறுக்கன்—சிறுவன் (மலையாளத் தொடர்பால் வந்தது)

வழுவாதவள் வீட்டில் கதவு தன்னில்
மாருக் குறியிட்டு வாருமென்ருன்.
துடுக்காய் நடவாமல் பையச் சென்று
சுண்ணக் குறியிட்டுத் திரும்பி வந்தான்.
கர்த்தன் பாண்டியன் கோவில் சென்ருன்
கதிரோன் உதயத்தைக் காட்டினனே!

அரசவை

உதய வேளையில் தளகர்த்தரும்
ஊரில் துரை மக்கள் ராகுத்தரும்
பதினெட்டு நாட்டு ராணுவத்தார்
பக்கமிருபுறம் சேவிக்கவே,
மூத்த மந்திரி தன்னை யழைத்து
மொழிந்தான் பாண்டியன் அருகிருத்தி
"கர்த்தன் காலத்தில் விளைவில்லையோ?"
கால மாரிகள் பெய்த துண்டோ?
தேசம் திசை மன்னர் கொள்ளையுண்டோ?
செங்கோல் வழுவாமல் நடக்கிறதா?" (என்று)
பேசும் வார்த்தையைக் கேட்டிருந்து
பின்பு காளிங்கன் எடுத்துரைப்பான்.
"அரசர் கற்பனையல்லாமல்
அதனமாய் ஒன்றும் நடக்கவில்லை"
வினய மந்திரி உரைத்த போது
வேந்தன் ஒட்டன் முகம் நோக்கி
கங்குல் குறியிட்ட வீட்டினுளே
கடுக வரச் சொல்லிக் கண்ணைக் காட்டி
மங்குல் விடிந்த பின் ஒட்டன் சென்று
"மன்னர் சமூகத்தில் வருவாய்" என்ருன்.
பொள்ளல் வீட்டிலே பிணங் கிடந்தால்

புகுந்து நாய் நரி பிடுங்காதோ?
வள்ளலே எந்தன் மேனிதன்னை
மறைத்து வருக வோர் சீலையில்லை.
இந்தக் கோலத்துக் கண்ணீரோடே
எந்தப் படியங்கே வருவேனெ"ன்றாள்.
'கோதுங் குழலாளோ, அழ வேண்டாம்
கூட வரும்போது குறையொன்றில்லை" (என்றான்)
இட்டுப் பாயிலே பிணஞ்சுருட்டி
இடிந்த கதவையும் எடுத்திச் சாத்தி
ஒட்டனுரைக்கும் வார்த்தையிலே
உள்ளம் பத்தியே உடனே போனாள்!
கூட்டத்துரை மக்கள் சமூகத்திலே
குலசேகரன் தன்னைத் தொழுதனளே
இட்டும் பெண் கொடி முக நோக்கி
"இரவிலே என்ன சொல்லியழுதாய்" என்றான்.
"மாலையிட்டவன் பிணமாய்ப் போனான்
வீட்டிலே குழந்தைகள் அஞ்சாறு உண்டும்
ஓலையொதுக்கில்லை கூரைக்குள்ளே
உப்புச் சிரட்டையும்[52] காணாது
சுடலைக் காட்டிலே புகையைக் கண்டால்
துட்டுத் தடிக்காரன் வருவானே
மடவார் குடத்துக்கும் பிணம் தனக்கும்
வரியுண்டாச்சுதே என்று அழுதேனன்றி
கெடுதியாய்ச் சொல்லி அழுதேனில்லை."
கேள்வி ராசாவே எனச் சொல்லினாள்
பெண்ணின் முகம் நோக்கி குலசேகரன்
பின்னும் செலவுக்குப் பணம் கொடுத்தார்.
வன்ன மடவாளைப் போகச் சொல்லி
மந்திரி முகம் பார்த்து ஏதோ சொல்வார்.

---

52. சிரட்டை—கொட்டாங்கச்சி (நெல்லை வழக்கு)

வீஞ்ஞதிவீணனை அழைத்துவரச் சொல்லல்

வேறு

"வீஞ்ஞதி வீணன் என்பவனாரடா,
வேண்டிச் சொல்கின்ற மந்திரி யாரோடா?
பேணியே குடக்காசு வாங்கவும்
பிணத்துக் கஞ்சு பணம் வாங்கச் சொன்னது
கலியாணத்துக்கு அஞ்சு பணம் வாங்கவும்
கண்ட பேர்க் கெல்லாம் காணியாய் போச்சுதோ?
தலையாரிகளைக் கூட்டி வாருங்கோ
தமுக்குப் போட்டு களுதஞ் சமையுங்கோ
மதுரை நாட்டுக்குக் குதிரைக்காரர் சென்று
மந்திரி வீட்டை முத்திரை போடெ"ன்றான்.
கதுவிப் பாளையக் காரரைக் கண் காட்டி
தம்பிமாரை மறித்துக் கொண்டு வந்தார்
குறிஞ்சிக் கூட்டந்தன்னை மிட்டக் கூப்பிட்டு
"கோட்டை வாசலில் கழுவது நாட்டெ"ன்றான்
"அளவிடைப் பிரமாணத்தில் நில்லாமல்
ஆசை வைத்தால் அழியாதோ காளிங்கா
களவு செய்வானைக் கச்சை தொட்டாடவே
கன்னக் கோலுக்குத் தெய்வ முண்டோ
கெங்கைக்கும் சிப்பானிக்குமாய்ப் பெண்கள்
குச்சுக் காத்துக் கிடக்கவே தேடினேன்.
செங்கோல் தப்பி நடக்கின்ற காலத்தில்
சேரக் கூடியே தெய்வத்தை நேருவார்
உலகம் கூடி ஒருவனைத் திட்டினால்
ஓடிப் போய் சென்று ஒதுங்கத் தலமுண்டோ?
கலக நாடும் தடி வீஞ்ஞதி வீணன்

கருவூலந்தேடி தரவென்றோ கற்பித்தாய்?"[53]
என்று பாண்டியன் கோபித்த நேரத்தில்
இறைஞ்சிக் காளிங்கன் ராசாவுக் கேது சொன்னான்?
"அன்று பொரந்தித் தடியால் அதிரு முன்னே
அஞ்சாறு நாளாய் சந்திப்பு காட்ட
என்றபடி என்னிடத்தில் சந்தித்தான்
பெருகும் சம்பளம்தான் வைத்தானோ இல்லை.
அன்பினாலே கிராம மணியமாய்
அடியேன் கற்பித்து விட்ட வனல்லவே
திருட்டியால் தொட்ட தெய்வத்தின் கோட்டி
தேவ ருத்தாரமென இருந்தேனையா
மருட்டினான் நாட்டையும், கோட்டையும், காட்டையும்
வளைந்து தன்னுட நகருக் குள்ளாக்கினான்
காளிங்கன் இப்படிச் சொல்லிக் காட்டவே
காரியக்காரர் தம்பிமாரைக் கேட்பார்
மேலும் காளிங்கன் போலவே நாங்களும்
காளிங்கன் தன் சமூகத்துக் காணவே
கலகக்காரனைச் சீக்கிரம் காட்டென்றான்.

வீரர் சென்று அவனை அழைத்தல்

கோல் வெள்ளித் தடிக்காரர் ஓடிப்போய்
'கொற்றவன் சொன்னார் நீ இப்போ வா" வென்றார்
'வா' என்று சொல்லிப் 'போ'வென்று சொல்லியே
மல்லரை விட்டு "வாசலடை" என்றான்
வைத்த தூதுவன் காவலன் முன்னமே
இடித்துத் தள்ளி அடைத்தான் கதவென்றார்
"தேசத்திலே விசாரிப்புக் குன்றினால்

53. கலகக்காரனை அரச பொக்கிஷத்திற்கு நிதி தேடித்தரவா நியமித்தாய்.

செத்துப் போவது புத்தி·தீரமே'' என்றார்
கோசி, மெய் காரர்தான்·பின்கெட்டு
கூட்டி வந்திட மாட்டாமல் கூசினார்
கப்பல்காரர் மிலேச்சரைக் கண் காட்டி
காப்பிலி மார்களைக்: கூப்பிட வாவென்றார்
அப்படிக் கவர் போ யெதிரே நின்று
''அரசனுத்தாரம் வா'' வென்று அழைத்தனர்.

வேறு

''வள்ளியூர் ஆளும் குலசேகரப் பெருமான்
மன்னன் போனானென்பது கேட்டது மூணு வருடம்
தெள்ளிய தம்பிமார் காளிங்கனோடே திரண்டே
......ஆய்ப் போனது உலகெட்டென் செல்
இன்றைக் கிருக்கிறாரென்றே திருவாலி யேதோ
இந்தப் பொய் சொல்லியோ கூட்டி வந்தீர்'' நீங்கள்
என்றார்.

''அன்றுடம் கால்பணத்துக்குத் தேடி உண்ணாமல்
அடித்துப் பறித்தவன் இப்படிச் சொல்லவும்
ஆச்சோ ?

தூக்கினான் முந்திப்பிடி கட்ட வாராயோ?'' என்று
சொன்னான்

என்று துடுக்காகச் சொல்கின்ற செய்தியைப்
பட்டாணி சொன்னான்

வாக்கது சொல்லுமுன் அஞ்சாறு கன்னத்தில் வைத்து
மட்டு விட்டுத் தள்ளிக் கொண்டான் தலைவாசல்
சேரத் தலைவிரிகோல மாயோடி முன்சென்று
''தேசத்தை யாள்கின்ற ராசதுரை யானதென்ன?
பாரிலுனக்கில்லை வீணாதி வீணன் தனக்கே பட்டம்
பாண்டி நாட்டை விட்டுப் போவதே உங்கள் எடுப்ப
தட்டிச் சொன்னேன், இரு கன்னத்துப் பல்லை
தகர்த்தான்

சம்பளம் தந்து நீர் சேவகம் கொண்டது சட்டம்''
கிட்ட இருந்து துரை மக்கள் சொல்லே கேட்டு

அவனைச் சிறைப்படுத்தக் கட்டளை

''கிணத்தங்கரை காசிருந்து விளைகின்ற கேடு
வைத்துப் பார்த்தால் கெட்டிவராது சுத்தி வளைத்து
மதங் கொண்ட யானையை விட்டே இடியுங்கோ
வாசல்''
தம்பிமார் காரியக் காரரும் ராணுவத்தாரும்
சந்தியில் வந்தவர் போர்க் கோலங் கேட்டுச்
சமைந்தார்
கொம்புக் கரியின் துதிக்கைக்கு உலக்கை கொடுத்தார்
குழல் காரனுக்கும் துப்பட்டி தலைப்பா கொடுத்தார்
வெள்ளைக் குதிரைமேல் பட்டாணி தடிகள் வீச
''வீரணுதி வீரனே வா''வென்று வையாணி விட்டார்
''கொள்ளைக் குடக்காசை அள்ளிக் கொண்டோடி
வா வே''
குதிரைப் படையோடவே கச்சந்திக்காரருங் கூடி
''பாண்டியன் தன்னை எதிராளியாகப் பகைத்தான்
பதினெட்டின் இன செல்வத்தை யெல்லாம் பறித்தான்''
கரண்டக்கை மேவிய ஒட்டன் திருநீலகண்டன்
காரியக் காரரை எல்லாம் அமர்த்தினுன் கையால்
''வாசலில் நான் போய் ஒரு வார்த்தை சொல்லி வரு
மட்டும்
வந்தபடை யெல்லாம் நிக்கச்''சொல்லி போனுன் வாசல்
அந்த ஒட்டன் போய் வீரணுதி வீரனுக்கே
ஆசனத்தில் போயிருந்தவன், வார்த்தை யளந்தான்.

ஒற்றனுடன் சந்திப்பு

வேறு

''குடக்காசு வாங்குதற்கு
கொடுத்தவன் உத்தார முண்டோ?

நடக்குமென்று சொன்னார்கள்
நன்மை தின்மைக் கஞ்சு பணம்
சொன்னவரைச் சொல்லிவிடு
சொல்லாதிருந்த துண்டால்
கன்னமிட்ட காசிருந்தால்
கழுவேறப் போவானேன்?
காசு கண்டாலரசர்கள்
களவு சோதிப்பாரோ?[54]
பேசுவதற்கு வாராமல்
புறங் காட்டி யிருப்பானோ
வீடுதன்னில் பணமிருந்தால்
விதனச் சொல் கேள்ப்பானோ?
நாடு கட்டியாளுதற்கு
நற்கால முண்டாச்சு
தலையளவு வந்தாலும்
சடைவு வர விடுவானோ?
குல சேகரனிடத்தில்
கூட வா" வென்றுரைத்தான்,

அரசவைக்கு வந்தான்

உருவின வாளொரு கையிலே,
உயர்ந்த பொந்தித்தடி யொருகை
திருகு முளைச்ச தோடு
சேர்த்தானே யொரு புறத்தில்
பிடிக் கடங்காப் பொன்னரை ஞாண்
பெருகு குஞ்சிப் பட்டரைஞாண்
குடக் கடுக்க நாழிப்பணம்

---

54. களவாடிய காசைக் கொடுத்து விட்டால் அரசர்கள் எப்படிக் களவு போயிற்றென்பதை விசாரிக்கமாட்டார்கள்.

கொண்டை முத்துக் கடுக்கனிட்டு,
தொண்ணூறு களஞ்சிப் படி
தூசிப் பொன் பதக்கனிட்டு
காத வழி மணக்குமந்த
கைத்தூரி தான் பூசி
தூதுவனுஞ் சேவகனும்
சுத்திவரவே நடந்து
செம்பு கம்பளிக் காரன்
சிறுக்கன் முன்னே யடைப்பமிட
கெம்பியக் கட்டியக் காரர்
கிளர்ந்த சங்கீதம் படிக்க,
பொற் பாதக் குறடு மிட்டு
புலி முறுக்குப் போல நடந்தான்,
தட்ட ராணுவத்தார்
தள்ளி நிற்கச் சட்டமிட்டு
நடுச் சபையில் வந்து நின்று[55]
நாடியிலே தடியூன்றி
வடுப்படாப் பாண்டியனை
வணங்காமல் நின்றனனே

மக்கள் முணுமுணுத்தனர்

"கூத்தாடியானாலும்
கும்பிடுவான் வந்து நின்று
காத்தவனைக் கொண்டாடுங்
கைத்தடிப் போயாட்ட முண்டோ?
சந்திப்பு வைக்க வில்லை
தாள்ச் செருப்பு நீக்கவில்லை.

55: அரசனைப் போல ஆடம்பரமாக வந்து அரசன் முன்னிலையில் வணங்காமல் நின்றான்.

வந்த செய்தி சொல்லவில்லை
மடையடியில் பூதமிதோ?
விறகெடுத்த புத்திதன்னை
விழுங்க வந்த புத்தியிதோ?''
முணு முணுத்துச் சனங்களெல்லாம்
முழுக் கோவங் கொண்டு நிற்க,

பாண்டியனார் கேள்வி

அடக்க முடன் பாண்டியனார்
அறியாத வகை நகைத்து
''குடக்காசுக் குத்தாரங்
கொடுத்தார்'' எனக் கேட்டான்
''அடியேன் வந்தே''னெனவே
அஞ்சலி செய்தே வணங்கி

வீணாதி வீணன் விடை

''காடு வெட்டிப் பயிரெடுத்த
கையறிய மாட்டேனோ?
பாடுபட்டு வியாபாரம்
பண்ணுதற்கும் அறியேனோ?
என்னைப் போல வீட்டு வழி
இரந்து குடித்தாரு முண்டோ?
பாண்டியனே நீ என்னைப் போல
பட்டினியாய்க் கிடந்ததுண்டோ?
வேண்டாத துன்பமதை
விலக்கி வைக்கத் திறமுமுண்டோ?
ஊர் முழுதும் அழுதழுது
ஓலமிட்டுத் திரிந்தேனே!
சாருமிந்தச் சனமுழுதும்

சாகாமலிருந்தீரோ?
அழுத பிள்ளைக் கிரங்காட்டால்
அம்மையுண்டோ? அப்பனுண்டோ?
தொழுவேறி விழும் புலியை
துரை மக்கள் குத்தாரோ?
உங்களுக்குத் தண்டிவரும்
ஊர்ப்பகுதி குறைந்ததுண்டோ?
தங்களுக்குக் கேள்வியுண்டு,
தனித்தவர்க்குக் கேள்வியில்லை
பணங் கொடுத்துக் கன்னடியான்
படை கூட்ட மாட்டானோ!
களத்திலுள்ள பாண்டியனைக்
கழுத்தறுக்க மாட்டானோ?[56]
வெட்ட வருஞ் சேவகனை
விலக்காதோ குடக்காசு?
கட்டி யென்னை வெட்டி வைத்தால்
கரும் பூதமாக வந்து
கோட்டை தன்னை தீக் கொளுத்தி
குடி வெருட்ட மாட்டானோ?
ஊட்டுகின்ற வாணிச்சி போல்
உங்களுக்குப் புத்தியுண்டோ?
பாப்பாவை மந்திரியாய்
வைத்திருந்த ராசாவே!
பண்புடைய என் வீட்டில்
பணச் சுமையைப் பாரு மென்றான்

---

56. இதற்கு முன் அவன் கூறும் விடை ராசநீதியை விளக்கி, தற்பொழுதில் பாண்டி நாட்டின் அவல நிலையை விளக்குகிறது.

புதைந்திருந்த பணம்

வேறு

கிடக்கின்ற மந்திரியைப் பார்த்து
கீழ் அறைக் காசும் மேல் வரட்டென்ருன்
பொட்டகம் இருநூறு வருகுதாம்
பொன்னிருல் எண்பது
வெள்ளிக் காசு மரக்கால் இருபது
வராகன் தானும் மரக்கால் ஒன்பது
தள்ளி வில்லிட்ட காசும் மேல்படி
தங்கக் காசு குருணியளந் தனன்
இன்னும் வேண்டிய தெல்லா மிருப்பதால்
மன்னவன் அதைக் கேட்டும் கிளர்ந்துதான்
மதயானை அலங்காரம் பண்ணியே
அவனி மயக்க பவனி வரச் சொன்ஞர்.
வாய்த்த தம்பிமார் மந்திரிமாரையும்
வள்ளியூர் சுத்திக் கூட வரச் சொன்ஞர்
பட்டணத்தை வலஞ்சுத்தி வந்த பின்
பாண்டியனை வலஞ் சுத்திச் சேவித்தான்.

குடகாசு நீக்கினுன்

"மட்டில்லாத விறகு சுமந்தேன் நான்,
மதயானை சுமந்துதே என்னைத்தான்,
முன்னமே உன்னைச் சந்தித்த பாக்கியம்
மூன்று கோடி பணக்காரன் ஆனேன் நான்
உன்னைக் கேளாது உனக்கென்று தேடினேன்,
உலகில் குத்தம் எனக்கில்லை தான்" என்ருன்
"நன்மை தின்மைக்கு அஞ்சுபணம் நீக்கினேன்,
நாட்டில் அக் குடக்காசையும் நீக்கினேன்

புன்மையான புலேயாட்டுத் தேடினேன்
பொக்கிஷத்துக் குள்ளே போட்டுக் கொள்வாய்''
என்ருன்

பணத்தை பகிர்ந்தளித்தல்

ஆறிலொன்று பணத்தைப் பகிர்ந்து தான்
ஆண்டவன் வள்ளியூர்த் தெய்வத்துக் காக்கிருன்.
மாறிலாறு பங்கை எடுத்தவன்
வறுமை கண்ட பெரியோர்க் கீந்தனன்.
பின்ஞெரு பங்கை சிவாலயம்
பூசை செய்திடத் தேசத் திலிட்டனர்
பொக்கிஷத்தில் ஒரு பங்கு போட்டனன்.
புகழும் வீஞ்ஞதி வீணனுக்கோர் பங்கு
இலக்குத் தப்பாமல் வீஞ்ஞதி வீணனே
இளேய மந்திரியாய் வைத்துக் கொண்டான்.

வாழ்த்து

வள்ளியூர்க் குமரப்பன் வாழிதான்
வன்மைசேர் குல பாண்டியன் வாழிதான்
தெள்ளிதான கவிராசன் வாழிதான்
செந்தமிழ் வீரர்களும் வாழிதான்
சந்த மேகமும் பூமியும் வாழிதான்
சைவ சிந்தாமணிப் புலவர்[57] வாழி
புத்தி கூர்ந்து படிப்பவர் கேட்பவர் வாழி
பொருளும் இன்பமும் பூதலம் வாழி
வீஞ்ஞதி வீணன் கதை முடிந்தது.

முற்றும் நன்ருக.

---

57. இது இப்பாடலே இயற்றியவர் பெயர் எனத் தோன்று கிறது. அவரைப் பற்றி வேறு எந்த விவரமும் தெரியவில்லே.

பிற் சேர்க்கை

எனது ஆராய்ச்சியுரையில் ''வீஞ்ஞதி வீணன், ஐவர் ராசாக்கள் கதையில் வரும் கற்பனைப் பாத்திரமாக இருக்கலாம்'' என்ற முடிவுக்கு வந்திருந்தேன். அம் முடிவை மாற்றிக்கொள்ளுவதற்கு தேவையான சான்றுகள் சில ஆராய்ச்சியுரை எழுதிய பின்னர் கிடைத்துள்ளன. அவற்றை வலியுறுத்த மேலும் சான்றுகள் தேடவேண்டும். அவை கிடைத்த பின்னரே இம் முடிவை மாற்றி வீஞ்ஞதிவீணன் சரித்திர புருஷன் என்ற இறுதி முடிவுக்கு வரமுடியும். ஆயினும் தற்பொழுது எனக்குக் கிடைத்திருக்கும் சான்றுகள் அம் முடிவுக்கு வழியமைப்பதாகத் தோன்றுவதால் அவற்றைக் குறிப்பிடாமல் ஆராய்ச்சியுரையில் கண்ட முடிவை அவ்வளவிலேயே விட்டுவிட எனக்கு மனமில்லை.

எனவே சமீபத்தில் என் கவனத்துக்கு வந்த சிற்சில சான்றுகளை மட்டும் இப்பொழுது கூறுகிறேன்: வள்ளியூரில் ''வீஞ்ஞதிவீணன் நீராவி'' என்ற பெயரோடு வழங்கும் சிறுகுளம் ஒன்றிருக்கிறது. அதன் பாசனப் புறவில் சுமார் முப்பது ஏக்கர் விளைநிலம் இருக்கிறது. இதை ''வீஞ்ஞதிவீணன் பற்று'' என்று அழைக்கிறார்கள். குளத்துக்குக் கீழ்புறம் இரண்டு கோயில்கள் இருக்கின்றன. ஊரார் அதனை மீனாட்சி சுந்தரேசுவர்

கோயில்கள் என்று அழைக்கிருர்கள். இவையிரண்டும் குடக்காசு வசூலித்து வீணுதிவீணன் கட்டியதாகக் கூறுகிருர்கள்.

நான் கோயில்களைப் பார்வையிட்டேன். கோயில்களில் அம்மன் கோவில் பின்புறச் சுவரில் கல்வெட்டுக்கள் உள்ளன. அதில் ஒன்று பின்வருமாறு: "ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கிரவர்த்திகள் சுந்தரபாண்டிய தேவர்க்கு யாண்டு பதினுலாவது.........இக் கோயிலுடைய பிராட்டியார்க்கு" என்று தொடங்கி அக்கோயிலுடைய நாயகிக்கு திருவிடையாட்டமாக விடப்பட்ட இறையிலி நிலம் பற்றிக் கூறுகிறது. சுவாமி கோவில் பின்புறச் சுவரிலுள்ள சாசனம் குலசேகரதேவர் காலத்தைக் காட்டுகிறது. மற்றுமோர் சாசனம் ஸ்ரீவல்லப தேவர் காலத்தில் அளித்த இறையிலி நிலம்பற்றிக் கூறுகிறது. ஆகவே இச் சாசனங்களின் காலம் வீணுதி வீணன் காலத்திற்கு 200 ஆண்டுகள் முற்பட்டது. எனவே இக் கோயிலைக் கட்டியவன் அவனல்ல. சாசனமளித்த மன்னர்களுள் சுந்தரபாண்டியனே முற்காலத்தவன். அவனுடைய காலத்திற்கு முன்பே கோயில் கட்டப்பெற்றிருக்க வேண்டும். அது சுமார் 700 ஆண்டுகளுக்கு முன்பாகலாம்.

ஆனுல் கருவறைக்கு அடுத்த முக மண்டபம், பாண்டியர் காலச் சிற்ப அமைப்பில் கட்டப்பெருமல், பிற்கால அமைப்பில் கட்டப்பட்டுள்ளது. தூண்களும் பழங்காலச் சிற்பங்களின்றி மொட்டையாக நிற்கின்றன. இவை பிற்காலத்தில் கட்டப்பட்டிருத்தல் வேண்டும். இவற்றை வீணுதி வீணன் கட்டியிருக்கலாம். ஆனுல் முக மண்டபத்திலோ, அர்த்த மண்டபத்திலோ சாசனங்கள் எவையும் இல்லை.

சுவாமி கோயிலின் முன்புள்ள கிணற்றின் அருகில் ஒரு சிலை நிற்கிறது. இது சுமார் 70 வருடங்களுக்கு முன் கிணற்றைத் தூர்வை எடுக்கும்போது, கிணற்றினடியிலிருந்து கிடைத்ததாம். இச்சிலை வீஞ்ஞதிவீணன் படிவம் என்று கோயில் பூசாரி கூறுகிறார். அச்சிலை இரண்டரை அடி உயரம் இருக்கிறது. தலையில் கொண்டை; கழுத்தில் ஒரு மாலை; இடையில் ஒரு வளைந்த நீண்ட வாள்; இது பாதி உடைந்திருக்கிறது. சாதாரணமான தட்டாடை கட்டியிருக்கிறது. கையில் பொந்தந்தடியொன்று இருக்கிறது. இது பாதி உடைந்திருப்பினும், நிச்சயமாகப் பொந்தந்தடியென்று தெரிகிறது.

அரச சின்னங்கள் இச்சிலையில் காணப்படவில்லை. அதிகாரிகளுக்கு அக்காலத்தில் மாலை அணிவித்துச் சிலை வடிப்பது வழக்கம். வீஞ்ஞதிவீணன் மந்திரியான பின்னர் சிலை செதுக்கியிருந்தால் இவ்வாறுதான் செதுக்கப்பட்டிருக்க முடியும். இச்சிலை நாயக்கர் காலத்திற்கு முந்தியது என்பதை கால்கள், வயிறு இவற்றின் அமைப்பிலிருந்து சொல்லிவிடலாம். நாயக்கர் காலச் சிலைகளுக்கு அழகிய தொந்தியும், உருண்டு திரண்ட தசைகளுள்ள கால்களும் இருக்கும். இச்சிலையில் தஞ்சைச் சோழர் காலத்து சிற்பமுறை அமைப்பைக் காண்கிறோம். எனவே சிலை விஜயநகரப்பாணி பரவு முன்னரே செதுக்கப்பட்டிருக்கவேண்டும்.

இவை யாவும், (முக்கியமாக கையிலுள்ள பொந்தந்தடியும், இடையிலுள்ள நீண்ட வாளும்) கதையில் வரும் வீஞ்ஞதிவீணன் இயல்புகளோடு பொருந்துகிறது. எனவே, வீஞ்ஞதிவீணன் வெறும் கற்பனைப் பாத்திரமென்று தள்ளிவிடுவதற்கில்லை.

அவன் பூசனை ஏற்படுத்தியதாகச் சொல்லப்படும் வேறு இரண்டு கோயில்கள் வள்ளியூரில் இருக்கின்றன. அவற்றில் கல்வெட்டுக்கள் உள்ளன. அவற்றை நான் படிக்கவில்லை. படித்த பின்னர் வீஞ்ஞதிவீணனைப் பற்றியும் அவன் அரசை எதிர்த்து நடத்திய கலகத்தைப் பற்றியும் பல புதிய உண்மைகளைக் கூறக்கூடும். அவற்றை, ஐவர் ராசாக்கள் கதையை முழுமையாக வெளியிடும் போது ஆராய்ச்சி உரையில் சேர்த்துக் கொள்ள எண்ணியுள்ளேன்.

நா. வா.

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 112438
EGMORE MADRAS

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
16	6	ஆர்த்தங் கழுகு	ஆர்த்தங் கழுது
17	25	ஆக்கிணை	ஆக்கினை
22	3	விதரச் சொல் கேட்பாஞே?	விதனச் சொல் கேட்பாயோ?
27	13	கல் வெட்டும்	கல் வெட்டுச்
30	28	சொற்களும் 'ஐந்து	சொற்களுக்கு 'ஐந்து
31	22	நிலத்தை	எல்லையை

இந்நூல் :

திரு நா. வானமாமலை, எம்.ஏ., எல்.டி. அவர்கள் தொகுத்த. இந்த ''வீணாதிவீணன் கதை'' மறந்துபோன கிராமீய கதைப் பாடல். வில்லுப் பாட்டாக அமைந்த இக் கதைப்பாடல் சமூகச் சீர்கேட்டை அம்பலப்படுத்தி கேலி செய்கிறது. ஒரு சமயத்தில் குலசேகர பாண்டியனது ஆட்சியில் ஊழல் மலிந்து விடுகிறது. அக்காலத்து கிராமீயக் கவிஞரால் இயற்றப் பெற்ற படைப்புத்தான் ''வீணாதிவீணன்'' என்ற இக் கதை. இவன் மன்னனின் சக்தியையும் மீறி குடத் தண்ணீர் வரி, மண வரி, மரண வரி முதலிய விபரீத வரிகளை மக்களிடம் பெறுகிறான். இத்தகைய தன் செயலுக்கு அரசாங்கத்தில் மலிந்திருந்த ஊழலும் சமூகச் சீர்கேடும்தான் காரணம் என்று சொல்லி, மன்னனின் கவனத்தை மக்கள்பால் இறுதியில் திருப்புகின்றான். இத்தகைய சிறந்த கிராமீயக் கதைப் பாடலை மறந்தொழிந்து போகாமல், நிலைத்துக் காத்து உதவும் வகையில், இப் பாடலை சேகரித்து அதற்கு ஓர் சிறந்த ஆராய்ச்சி முன்னுரையும் எழுதி, திரு. வானமாமலை அவர்கள் இந்நூலை வழங்கியுள்ளார். படித்துப் பயனடைய வேண்டிய நூல்.

NCBH

Wrapper Printed at the Asian Printers, Madras-5.